
# முன்பள்ளி முகாமைத்துவக் குழுவினருக்கான வழிகாட்டி கைந்நூல்




வடமாகாணம்

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

முன்பள்ளிகளுக்கான "முன்பள்ளி முகாமைத்துவக்குழுவினருக்கான வழிகாட்டி" கைந்நூலுக்கு முகவுரை எழுதுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முன்பள்ளிப்பருவ கல்வி பரந்த கல்வித்திட்டங்களைக் கொண்டதாக அமைகின்றது. முறையான பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கும் வயது வரைக்கும் மாணவர்களை தயார் நிலைப்படுத்துவதே முன்பள்ளிக்கல்வியாகும். முனபள்ளிபாடசாலைகளை நடத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகள் மற்றும் நிதி உதவிகள் ஆகியவற்றைப் பெறும் பொருட்டு தனியார் அல்லது தனிப்பட்ட நிறுவனங்கள் போன்றவற்றின் முயற்சி தேவைப்படுகின்றது. இப்படியான தனிப்பட்ட முயற்சிகள் நாட்டின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உதவியளிக்கிறது. எனினும், பெரும்பாலான தனியார் முகாமைத்துவ முன்பள்ளிகளை மேம்படுத்துவதற்கு மேலும் உதவிகள் எதிர்பார்க்கப்படுகிறது. வடமாகாண சபை முன்பள்ளிப்பிள்ளை விருத்திசாசனக் கோவையின் படி உறுதியான முகாமைத்துவக்குழுவே முன்பள்ளியை திறமையாக நிர்வாகிக்கமுடியும் என அறிய முடிகிறது.

முகாமைத்துவக்குழு முழுமையான பொறுப்பைக் கொண்டதாகவும் நிலைத்து நிற்கக்கூடியதாகவும் சட்ட ரீதியானதாகவும் செயற்பட வேண்டியது பிரதான கடமையாகும். முகாமைத்துவக்குழு தனது பொறுப்புக்கள் யாவற்றையும் விழிப்புடன் கண்காணித்து பாடசாலை நிர்வாகத்தை தொழில்வாண்மையுடன் நடத்துதல் வேண்டும். இதன் அடிப்படையில் முகாமைத்துவக் குழுவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இலங்கை "சிறுவர் நிதியம்" முன்பள்ளி முகாமைத்துவக் குழுவினருக்கான வழிகாட்டி கைந்நூலினைத் தயாரித்து வழங்கும்படி 'ஆறுதல்' நிறுவனத்தை கோரியது. அதற்கமைய இக்கைந்நூல் வழிகாட்டியானது 12 அலகுகளைக்கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிகளை முகாமைத்துவம் செய்வதற்குஎதிர்பார்க்கப்படும் நோக்கோடுஅத்தியாவசியமான உருப்படிகள் யாவும் சேர்க்கப்பட்டுள்ளன. முகாமைத்துவக் குழுவின் வகிபங்கை திறம்பட உற்சாகத்துடன் செயற்படுத்தும் நோக்குடன் இக்கைந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டல் கைந்நூல் முன்பள்ளி முகாமையாளருக்கு பயனுள்ள பயிற்சி அனுபவங்களை அளிப்பதோடு முன்பள்ளிகளையும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு உதவும் எனஎண்ணுகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் எமக்கு இக்கைந்நூல் தயாரிக்க நிதி உதவிவழங்கிய, இலங்கை சிறுவர் நிதியத்திற்கும் சிறந்த உள்ளீடுகளை வழங்கி இக்கைந்நூலை ஆக்கிய வளவாளர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். இச்சந்தரப்பத்தில் எமது குழுவைக் குறிப்பிடவில்லையெனில், நான் எனது கடமையிலிருந்து தவறியுள்ளேன்.

வாழ்த்துக்கள்.

**சுந்தரம் டிவகலாலா**

பிரதமநிறைவேற்றுபணிப்பாளர்

ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பொதுக்கல்வித் துறையில் இன்று முன்பள்ளிக்கல்வியானது பேசுபொருளாக மாறியுள்ளதோடு மாணவர்களது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் ஆளுமை விருத்திக்கும் அடித்தளமாவது முன்பள்ளிக்கல்வியின் தராதரமே என்பது இன்று கல்வியுலகில் உணரப்பட்டுள்ளது. தராதரமான முன்பள்ளிக்கல்வியானது ஒவ்வொரு பிள்ளைக்கும் கிடைக்க அரசுகள் ஆவன செய்தல் வேண்டும் என்னும் ஆய்வுகள்சார்ந்த உடன்பாடுகளை உலகக்கல்வி மாநாடுகள் மூலமாக உலகநாடுகள் எட்டியுள்ளன. தராதரமான முன்பள்ளிக்கல்வியானது பிள்ளைகளது உடல், உள, ஆற்றல் விருத்திக்கு அத்தியாவசியமானதோடு பிள்ளைகளது ஆரம்பப்பாடசாலைக் கல்விக்கும் அத்திவாரமிடுகின்றது. மேலும் எதிர்காலத்தில் ஆளுமைமிக்க மனிதர்களாக வாழுவதற்கு வலுசேர்க்கின்றது. முறைசார் கல்வியின் ஆரம்பப்பாடசாலை அனுமதிக்குரிய அடிப்படைத் தேர்ச்சிகளைப்பிள்ளைகள் தமது குடும்பங்களில் சரிசமமாகப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அருமையாகவே காணப்படுவதால் அவ்வாறான அத்தியாவசியத் தேர்ச்சிகளை அனைத்துப் பிள்ளைகளும் பெறுவதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டவகையில் செய்யவேண்டியது காலத்தின் தேவையாகும். உலகில் கல்வியில் முன்னிலை வகிக்கும் நாடுகள் பலவும் எல்லாவற்றிற்கும் அடிப்படையான முன்பள்ளிக்கல்விச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கமுறையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. எமதுநாட்டிலும் தற்போது முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவமும் முதன்மைப்பாடும் உணரப்பட்டுள்ள போதிலும் தராதரமான முன்பள்ளிக்கல்வியை அனைத்துப் பிள்ளைகளுக்கும் வழங்குவதில் கட்டமைப்புரீதியான குறைபாடுகளோடு, கற்றல் - கற்பித்தலிலும் சமவாய்ப்பிலும் பலவீனங்கள் நிறைந்தேயுள்ளன.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முறையான களநிலை ஆய்வுகளும் செயற்பாட்டுப் பொறிமுறைகளும் தேவைப்படுகின்றன. முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்களிடம் போதியளவு இல்லாதிருப்பது பல்வேறு ஆய்வுச்சான்றுகள் மூலம் அறியப்பட்டுள்ளன. முன்பள்ளிச் சிறார்களுக்குத் தேவையான தேர்ச்சி மட்டங்களை அடைவிப்பதற்கான செயற்பாட்டுப் பங்குதாரர்களாகப் பிள்ளைகளின் பெற்றோரும் அவர்கள் வாழும் வீட்டுச் சூழலும் அடையாளம் காணப்பட்டுள்ளன. முன்பள்ளிகளின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளுடன் முரண்படாத வகையில் பிள்ளைகளின் பெற்றோர்களும் அவர்கள் வாழும் வீட்டுச்சூழலும் பிள்ளைகளின் தேர்ச்சிஅடைவுக்குப் பங்காற்றவேண்டியது இன்றியமையாததாகும். இதனை நிறைவேற்றும் நோக்கிலேயே இன்று இலங்கை முன்பள்ளிகளில் பிள்ளைகளின் பெற்றோர்களை உள்ளடக்கிய முன்பள்ளி முகாமைத்துவக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முகாமைத்துவக் குழுக்களின் அங்கத்தவர்களான பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் முன்பள்ளிகளை நடத்துகின்ற நிறுவன அங்கத்தவர்களையும் விழிப்புணர்வூட்டி, நெறிப்படுத்தி ஒழுங்கமைக்கும் நோக்குடன் இந்தச் செயற்றிட்டக்கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. சாத்தியமான வழிகளில் பங்குதாரர்கள் அனைவரது ஒத்துழைப்பினை நாடி நிற்பதுடன் இதன் முறையான அமுலாக்கத்திற்கும் பயன்பாட்டிற்கும் சம்பந்தப்பட்டவர்களது அக்கறையினையும் ஆக்கப்பாட்டினையும் இதனை ஆக்கிய குழு அன்போடு எதிர்பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## - ஆக்கக்குழு –

1. Dr.S.. **சேதுராஜா**
   SLPS , SLEAS(ஓய்வுநிலை அதிபர்)
2. **திரு**. S. **மாதவகுமரன்**
   Sp.Maths.Trd., B.A, B.Sc, Dip. in Ed, M.Ed,
   உதவிக்கல்விப்பணிப்பாளர் (ஓய்வுநிலை),
3. **திரு** S. **மகேசு**
   உதவிக்கல்வி பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி (ஓய்வுநிலை)
   வடகிழக்கு மாகாணம்
4. **திரு**. S. **கணேசலிங்கம்.**
   B.A (Hons), PGDE (Merit),MED (Merit)
   உதவிக்கல்விப்பணிப்பாளர்,
   வலயக்கல்வி யாழ்ப்பாணம்.
5. **திரு**. S. **தில்லைநாதன்**
   Primary Trd, B Ed.
   உதவிக்கல்விப்பணிப்பாளர் ECD.
   வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்
6. **திரு**. S. **கிருபானந்தன்.**
   B.A (Hons), Dip. in Ed,
   உதவிக்கல்வி பணிப்பாளர்
   (ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்தி),
   வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்
7. **திருமதி** .K. **ஆனந்தகௌரி**
   B.A (Hons), MED
   உதவிக்கல்வி பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
   தீவக வலயக்கல்வி
8. **திருமதி.** N. **றஞ்சிதமலர்**,
   BBA (Hons), MA (Hons) Sociology.
   நிபுணுத்துவ ஆலோசகர், ஆறுதல்.
9. **திருமதி**. F. **அம்பிகை**
   B.A., Dip in English,
   Freelance Translator
10. **செல்வி.** R. **சியாமளி,**
    B.A (Hons).
    செயற்றிட்ட அலுவலகர், ஆறுதல்
11. **செல்வி.** K. **வர்சினி,**
    B.A (Hons).
    செயற்றிட்ட அலுவலகர், ஆறுதல்
12. **செல்வி.** M. **சோபிகா,**
    B.A (Hons).
    செயற்றிட்ட அலுவலகர், ஆறுதல்
13. **திரு**. J. **கஸ்தூரன்,**
    B.A (Hons).
    செயற்றிட்ட அலுவலகர், ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம். பக்கம்


1. முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவம் ........ 01

2. பாடசாலைத் தயார்நிலை ........ 09

3. முன்பள்ளிக் கல்வி முகாமைத்துவம் ........ 13

4. முகாமைத்துவக்குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும் ........ 18

5. முன்பள்ளி முகாமைத்துவ நிருவாகக் கட்டமைப்பு ........ 21

6. முன்பள்ளிகள் கொண்டிருக்கவேண்டிய தரங்கள் ........ 25

7. முன்பள்ளிக்கல்வி கலைத்திட்ட அறிமுகம் ........ 30

8. சிறுவர் உரிமைகளும் பாதுகாப்பும் ........ 35

9. சிறுவர் துஷ்பிரயோகமும் பால்நிலை சமத்துவமும் ........ 37

10. முன்பள்ளி பிள்ளைக்களுக்கான உள்ளூர் வளங்களை உள்ளடக்கியதான சுகாதாரமும் போசாக்கும் ........ 43

11. முன்பள்ளிகளில் பயன்படுத்துகின்ற ஆவணங்கள் ........ 48

12. கூட்டங்கள் நடாத்துதலும் அறிக்கை எழுதுதலும் ........ 50

13. பின்னிணைப்பு ........ 52

பின்னிணைப்பு 2.1

பின்னிணைப்பு 2.2

பின்னிணைப்பு 2.3

பின்னிணைப்பு 2.4

பின்னிணைப்பு 8.1

14. உசாத்துணை நூல்கள் :- ........ 56




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 1

## முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவம்

## Importance of Preschool Education

### 1.1 அறிமுகம்

1. உலகளாவிய ரீதியில் முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவம் இன்று நன்கு உணரப்பட்டுள்ளது.
2. ஆகக்குறைந்தது ஒரு வருடமாவது இளஞ்சிறார்களுக்கு முன்பள்ளிக்கல்வி வழங்கப்பட வேண்டும் என உலகக்கல்வி மன்றம் (2015) வலியுறுத்தியுள்ளது.
3. நல்ல உடல் நலக்கவனிப்பும், சத்துள்ள உணவும் முறையான சரீர, உணர்வு, உளவழிச்சமூக விருத்தி போன்றவற்றை ஊக்குவிக்கும் சூழலும் இளஞ்சிறார் கல்விக்கு அவசியமானவையாகும்.
4. ஒவ்வொரு இளஞ்சிறார்களுக்கும் உயர்தரத்தில் முன்பள்ளிக்கல்வி வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
5. முன்பள்ளிக்கல்வியானது உயர்தரமுடையதாக வழங்கப்படுவதற்கு பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு உளவழி-சமூக ஆலோசனைத்துணை வழங்கப்படுதல் வேண்டும்.
6. தரமான முன்பள்ளிக்கல்வியானது சிறார்கள் ஆரம்பக்கல்விக்கு சுமுகமாக மாறுவதை இலகுவாக்கும்.
7. சிறார்கள் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முன்பள்ளிக்கல்விஉறுதுணையாகும்.
8. சமுதாயத்தில் ஒத்திசைவான எதிர்காலப் பிரஜைகளாக வாழ்வதற்கு தரமான முன்பள்ளிக்கல்வியானது வலுவான அத்திவாரத்தை இடும்.
9. மனிதவள விருத்திக்கும் அதனூடான சமூக நீதிக்கும் தரமான முன்பள்ளிக்கல்வி ஆதாரமாக அமையும்.
10. முன்பள்ளிக் கல்வியின் தரவேறுபாடானது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் காணப்படும் இடைவெளிக்குக் காரணமாகின்றது.
11. முன்பள்ளிக்கல்வியின் தராதரச் சமமின்மையானது மாணவர்கள் வாழ்க்கைப்பாணியில் வேறுபடும் தன்மையை அதிகரிக்கும்.
12. தரமான முன்பள்ளிக்கல்வி மனித விருத்தியை மேம்படுத்தி சமூக நீதியை வலுப்படுத்துவதற்குத் அத்திவாரமிடும்.
13. சிறார்களின் முன்பள்ளிக்கல்விக்குப் போதியளவு உள்ளீடுகளை வழங்குவதானது நாட்டுக்கும் வீட்டுக்கும் நீண்ட காலப் பொருளாதார நலன்களைத் தரும்.
14. தரமான முன்பள்ளிக்கல்வியானது முன்பள்ளிகளுக்கான தரமான உள்ளீடுகள், பொருத்தமான கலைத்திட்டம், தரமான ஆசிரியர் பயிற்சி, செயற்பாட்டு ரீதியான தரமான கற்பித்தல், புலன்பயிற்சிகள் என்பவற்றினாலேயே சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 இலங்கையில் முன்பள்ளிக்கல்விப் பிரச்சினைகள்

1. பிறருடன் பழகவும், ஆளுமை விருத்தி பெறவும் தேவையான சமூகத் தேர்ச்சிக்கு மாறாகப் பெற்றோர்கள் கல்வித்திறன்களை அடையுமாறு விரும்புகின்றனர்.
2. கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் கற்றலை பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புகின்றனர்.
3. ஆங்கிலம் போதனா மொழியாக இருக்க வேண்டுமெனச் சில பெற்றோர்கள் விரும்புகின்றனர்.
4. முறையான முன்பள்ளிக் கல்விப் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் சிறார்களுக்குத் தவறான அறிவுரைகளையும் நெறிப்படுத்தல்களையும் வழங்குகின்றனர்.
5. ஆசிரியர்களது கல்வி மற்றும் தொழிற்றகைமைகள் பாரியளவில் வேறுபடுகின்றன. இதனால் அவர்களது கற்பித்தல் முறையும் வேறுபடுகின்றது.
6. முன்பள்ளிச் சிறார்களிடம் வலுவான ஊட்டச்சத்து குறைபாடுகள் நிலவுகின்றன.
7. ஆரம்பப் பாடசாலைகள் பலவும் கல்வித்திறன்களை எதிர்பார்த்துச் செயற்படுகின்றன.
8. சிறார்களது பாதுகாப்பு, குடும்பச் சூழல் போன்றவை போதியளவு கவனிக்கப்படுவதில்லை.
9. முன்பள்ளி ஆசிரியர் தேவைகள் சீரானதாக இல்லை

## 1.3 முன்பள்ளிக்கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் வடமாகாணத்தின் முன்பள்ளிக் கல்வியில் காணப்படுகின்ற முனைப்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

**1.3.1 இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.**

I. சிறார்களின் பெற்றோருக்கு முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தினை முன்னெடுத்தல்.

II. முன்பள்ளிக்கலைத்திட்டம் தொடர்பான அறிவினையும், செயற்பாட்டுத்திறன்களையும் பெற்றோருக்கு வழங்குவதும் உருவாக்குவதும்.

III. சிறார்களின் கவனிப்பு, ஊட்டம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தலும் அவற்றிற்கான செயற்பாட்டுத்திறன்களை விருத்தியாக்கலும்.

VI. முன்பள்ளிச்சிறார்களின் செயற்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாட்டையும் பங்களிப்பையும் விருத்தியாக்கி மேம்படுத்தல்.

V. முன்பள்ளி, முன்பள்ளிச்சமூகம் ஆகியவற்றிற்கிடையேயான உறவாக்கச் செயற்பாடுகளில் பெற்றோர்வளவாளர்களை உருவாக்குவதும் பயன்படுத்துவதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.3.1.1 முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோருக்கு முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டம்.**

அலகு: முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவம்.

உள்ளடக்கம்: - முன்பள்ளிக்கல்வியின் உலகளாவிய நிலைமைகள்.

- இலங்கையில் முன்பள்ளிக்கல்வி நிலைமைகள்.
- முன்பள்ளிக்கல்வியில் பெற்றோர் தொடர்பான பிரச்சினைகள்.
- பெற்றோர் தொடர்பான பிரச்சினைகளுக்கான உத்தேசத் தீர்வுகள்.

| குறிக்கோள்கள் | கற்றற் பேறுகள் | செயற்பாடுகள் | தேவையான வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. முன்பள்ளிக் கல்வியின் உலகளாவிய நிலைமைகளை விளங்கிக்கொள்ளுதல் | - பெற்றோர் வரவுப் பட்டியல்.<br>- அறிகை நிலையின் குழு அறிக்கை முன்வைப்பு.<br>-முன்வைப்புக்குறிப்புக்கள் | - பெற்றோரை வரவழைத்தல்.<br>- குழுக்களை அமைத்தலும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கலும்.<br>(5 குழுக்கள், ஒவ்வொன்றிலும் 7 அங்கத்தவர்கள்)<br>- குழுவேலை<br>- குழு முறையில் அறிகையினை வெளிப்படுத்த வாய்ப்பளித்தல்.<br>- அறிக்கை மீதான குழுக்கலந்துரையாடல். | காகிதாதிகள்<br>கையேடுகள்<br>முன்வைப்புத் தாள்கள்.<br>பல்லூடக எறியி (Multimedia Projector)<br>எழுதுகருவிகள்.<br>கணினி<br>ஒலிப்பதிவுக் கருவிகள். | குழுமுறை<br>விரிவுரை<br>கலந்துரையாடல் | 20 நிமிடம் | கலந்துரையாடல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள்கள் | கற்றற் பேறுகள் | செயற்பாடுகள் | தேவையான வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 2. முன்பள்ளிக் கல்வியில் பெற்றோர் தொடர்பான பிரச்சினைகளைக் இனங்காண்தல் | - குழுக்களின் விபரம்<br>- முன்வைப்பு அறிக்கைகள் | குழுக்கலந்துரையாடல் மூலம் பிரச்சினை வெளிப்பாடு.(அதே குழுக்கள்)<br>- குழு முன்வைப்பு<br>- மேலதிக தகவல்களை முன்வைத்தல். | காகிதாதிகள்,<br>அட்டைகள்,<br>எழுதுகருவிகள்.<br>பல்லூடக எறியி<br>கணினி<br>போஸ்டர் தாள்<br>வெண்பலகை | குழுமுறை<br>கலந்துரையாடல்<br>குழு முன்வைப்பு | 20 நிமிடம் | குழுக் கலந்துரையாடல். |
| 3. பெற்றோர் தொடர்பான பிரச்சினைகளுக்கான உத்தேசத் தீர்வுகளை பட்டியல்படுத்தல் | - குழுக்களின் விபரம்<br>- தீர்வுப் பட்டியல்கள்<br>- சீரமைக்கப்பட்ட தீர்வுப்பட்டியல் | குழுக்கலந்துரையாடல்<br>- தீர்வுகளை முன்வைத்தல்.<br>- தீர்வுகளைச் சீரபடுத்தி வெளிப்படுத்துதல். | காகிதாதிகள்,<br>நூல்கள்,<br>ஆவணங்கள்<br>முன்பள்ளிக்கல்வி தொடர்பான அறிக்கைகள்.<br>எழுதுகருவிகள்.<br>கணினி வசதி.<br>முன்வைப்புத் தாள்கள். | கலந்துரையாடல்<br>குழுக்கலந்துரை யாடல் | 20 நிமிடம் | வெளியீட்டைப் பார்வையிடல்.<br>தீர்வுகளைப் பரிசோதித்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.3.1.2 முன்பள்ளிக் கலைத்திட்டம் தொடர்பான அறிவினையும் செயற்பாட்டுத் திறன்களையும் பெற்றோரிடையே உருவாக்குதலும் மேம்படுத்தலும்.**

| குறிக்கோள்கள் | கற்றற் பேறுகள் | செயற்பாடுகள் | தேவையான வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. முன்பள்ளிக் கல்விக்கலைத்திட்டம் தொடர்பான பெற்றோரின் அறிகையினை அறிதல். | பாடத்திட்டம் தொடர்பான எழுதப்பட்ட அட்டைகள். | கலந்துரையாடல் மூலம், எழுதும் அட்டைகளை வழங்குதல் மூலம் அறிதல். | காகித அட்டைகள், எழுதுகருவிகள், வெண்பலகை<br>ஒட்டுப்பசை | கலந்துரையாடல்<br>அவை முன்வைப்பு | 25 நிமிடம் | வெளியீடுகளையும் தனியாள் செயற்பாடுகளையும் பார்வையிடல் |
| 2. முன்பள்ளிக்கல்விக் பாடத்திட்டம் தொடர்பாக பெற்றோரின் எதிர்பார்க்கைகளை வெளிப்படுத்தல். | - எதிர்பார்க்கை அறிக்கைகள்.<br>- கலந்துரையாடல் பதிவுகள்.<br>- சீரமைக்கப்பட்ட கலைத்திட்ட ஆவணம் | - குழுக்கலந்துரையாடல் மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் முன்வைப்பு, கலந்துரையாடல் பகுப்பாய்வு<br>- சரியான தேவைகளை இனங்கண்டு சீர்ப்படுத்துதல். | காகிதாதிகள், எழுதுகருவிகள்.<br>ஒலி, ஒளிப்பதிவுக் கருவிகள்.<br>நூல்கள், ஆவணங்கள். | குழுக்கலந்துரை யாடல்<br>விவாதம்.<br>கலந்துரையாடல்.<br>விரிவுரை. | 20 நிமிடம் | அவதானிப்பு<br>பரிசோதனை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.3.1.3. சிறார்களின் கவனிப்பு, ஊட்டம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துதலும் அவற்றிற்கான செயற்பாட்டுத் திறன்களையும் விருத்தியாக்கல்**

| குறிக்கோள்கள் | கற்றற் பேறுகள் | செயற்பாடுகள் | தேவையான வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. பிள்ளை நலன்,போசாக்குத்தொடர்பில் பெற்றோரின் விழிப்புணர்வு நிலையை இனங்காணல். | குழுக்களின் விபரம் பிரச்சினைகளின் எழுத்து ஆவணம். | - பெற்றோரைக் குழுக்களாக்கி கலந்துரையாடுதல். (4 குழுக்கள்) - நிலைமைகளை, பிரச்சினைகளை எழுத்துருவாக்கல். - முன்வைத்தல். | காகிதாதிகள் எழுதுகருவிகள் டிமை தாள்கள். | கலந்துரையாடல் முன்வைப்பு | 20 நிமிடம் | அவதானிப்பு பரிசீலனை |
| 2. பிள்ளை நலன் போசாக்குத் தொடர்பிலான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பட்டியல்படுத்துதல் | உரிய தீர்வு யோசனைகள். தீர்வுக்கான எழுத்து ஆவணம். | - தீர்வுகளைக் கண்டறிதல். | காகிதாதிகள் எழுதுகருவிகள் பல்லூடகம் நூல்கள், ஆய்வு அறிக்கைகள். | கலந்துரையாடல் விரிவுரை குழுவேலை | 20 நிமிடம் | அவதானிப்பு பரிசோதனை |
| 3. தீர்வு யோசனைகளைச் செயற்பாடுகளாக்குதல் | செயற்பாட்டு உத்திகளின் வரைபு<br><br>சீர்செய்வதற்கான தீர்வு யோசனைகளின் ஆவணம். | -தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் உத்திகளை கலந்துரையாடுதல். -எழக்கூடிய மட்டுப்பாடுகளைக் கலந்துரையாடுதல். -நடைமுறைகளை வகுத்தல். | காகிதாதிகள் எழுதுகருவிகள் பல்லூடக எறியி நூல்கள் காணொளிகள் | கலந்துரையாடல் முன்வைப்பு எழுத்தாக்கம் | 20 நிமிடம் | அவதானிப்பு பரிசீலனை பரிசோதனை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.3.1.4. முன்பள்ளிச் சிறார்களின் பள்ளிச் செயற்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாட்டினையும் பங்களிப்பினையும் உருவாக்கி மேம்படுத்தல்.

| குறிக்கோள்கள் | கற்றற் பேறுகள் | செயற்பாடுகள் | தேவையான வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. நடைமுறையில் பெற்றோர் தம் பிள்ளையின் கல்வி நலனில் கொண்டுள்ள ஈடுபாட்டினையும் வழங்குகின்ற பங்களிப்புக்களையும் கண்டறிதல். | - பங்களிப்புப்பற்றிய குழுக்களின் விபர அறிக்கை.<br>- பெற்றோரின் மனப்பாங்கு வெளிப்பாடு அறிக்கை.<br>குழுவேலை (ஒன்றிணைத்தல் படங்கள்) | - குழுமுறையில் கலந்துரையாடி பெற்றோர் பங்களிப்பை கண்டறிதல்.<br>- முன்பள்ளிச் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோரின் மனப்பாங்கையும் அபிப்பிராயங்களையும் மதிப்பிடல். | காகிதாதிகள், எழுதுகருவிகள், டிமைதாள்கள், வெட்டுத்துண்டுகள் படங்கள், பசை, நூல்கள். | குழுமுறை போட்டிச் செயற்பாடுகள். | 20 நிமிடம் | சரிபார்த்தல். வினாவிடை கருத்து அறிதல். |
| 2. எதிர்காலத்தில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வியில் வழங்கக்கூடிய பங்களிப்புக்களை இனங்காணல். | - பெற்றோர் பங்களிப்புப் பட்டியல்.<br>- பெற்றோர் மனப்பாங்கு விருத்திச்சான்றுகளின் பதிவுகள். | - பெற்றோர் பங்களிப்புக்களை வெளிக்கொணர்தல்.<br>- முன்பள்ளிக் கல்வி தொடர்பாக பெற்றோரிடையே ஆரோக்கியான மனப்பாங்கு விருத்தியை சாத்தியமானதாக்குதல் (கவிதை, சித்திரம் வரைதல்) | காகிதாதிகள், நூல்கள்,படங்கள், எழுதுகருவிகள். படங்களின் தொகுதிகள் (ஒன்றிணைத்தல் படங்கள்) ஒலிப்பதிவுக் கருவிகள் வரைதல் தாள்கள் வர்ணங்கள். | கலந்துரையாடல் நடிப்பு குழுவேலை தனி வேலை | 20 நிமிடம் | அவதானிப்பு பரிசீலனை மதிப்பிடுதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.3.1.5 முன்பள்ளி - முன்பள்ளிச் சமூகம் ஆகியவற்றிற்கிடையேயான உறவாக்கச் செயற்பாடுகளில் பெற்றோர் வளவாளர்களை உருவாக்குவதும் பயன்படுத்துவதும்.**

| குறிக்கோள்கள் | கற்றற் பேறுகள் | செயற்பாடுகள் | தேவையான வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. முன்பள்ளிக்கான முக்கியத்துவம் சார்ந்த பெற்றோர் வளவாளர்களை உருவாக்குதல். | - தெரிவு செய்யப்பட்ட பெற்றோர் வளவாளர் பெயர்ப்பட்டியல்.<br>- தமது முன்பள்ளிக்கல்வி பங்குபற்றலின் முக்கியத்துவம் தமது பங்களிப்பு ஆகியன பற்றி போதியளவு விளக்கம் பெற்றிருப்பர்.<br>- பயிற்றுவிக்கப்பட்ட பெற்றோர் வளவாளர் பெயர்ப்பட்டியல். | - பொருத்தமான பெற்றோர்களைத் தெரிவு செய்தல்.<br>- தெரிவுசெய்யப்பட்ட பெற்றோர்களை பயிற்றுவித்தல். | காகிதாதிகள், எழுதுகருவிகள் விபரப்படிவங்கள் நூல்கள்(வாசிப்பு) படவிளக்க அபிப்பிராயப் படிவங்கள் ஆவணங்கள், பல்லூடக எறியி, கணினி, காணொளிகள். | கலந்துரையாடல், நேர்காணல், தனிவேலை, குழுவேலை, முன்வைப்பு. | 20 நிமிடம் | பரிசீலனை, புள்ளியிடல், மதிப்பிடல், அவதானிப்பு |
| 2. முன்பள்ளி கல்வி வேலைத்திட்டங்களில் பெற்றோர் வளவாளர்களைப் பயன்படுத்துதல். | சமூக மட்டத்தில் செயற்படுத்துவதற்கான செயற்றிட்ட வரைபு.<br>வேலைப்பகிர்வுப் பட்டியல்.<br>நேர அட்டவணை<br>வேலை அறிக்கை | வேலைத்திட்டத்தினை வரைதல்.<br>வேலைகளைப் பகிர்ந்தளித்தல்.<br>சமூக மட்டத்தில் குழுக்களாக பிரசாரம் செய்தல்/செயற்பாடுகளை முன்னெடுத்தல். | காகிதாதிகள், எழுதுகருவிகள், கணினி, பல்லூடக எறியி, நாட்காட்டி மதிப்பீட்டுப் படிவங்கள். | குழுக்கலந்துரையாடல் குழுவேலை (அணிமுறை), சமகுழு மதிப்பீடு. | 20 நிமிடம் | பரிசீலனை அவதானிப்பு அறிக்கை மதிப்பிடுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு :- 02

## பாடசாலைத் தயார் நிலை (School readiness)

இரண்டாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள் (Millennium Development Goals), எல்லோருக்கும் கல்வி என்ற குறிக்கோள் (Education for all) போன்றவை எல்லா நாடுகளும் ஒரு தரமான அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டும் என்ற உறுதியுடன் செயற்படுவதற்கு வழிகாட்டின. எவ்வாறாயினும்,பிள்ளைகள் பாடசாலைக்கு உரிய காலத்தில் சேராமை, ஒழுங்காக வருகை தராமை, கற்கத்தவறுதல், இடையிலே பாடசாலையை விட்டு நீங்குதல், உரிய தேர்ச்சியை அடையாமை போன்ற குறைபாடுகள் எல்லா நாடுகளுக்கும் ஒரு சவாலாகவே இருந்துவருகின்றன.

வறுமை, புவியியல் ரீதியான இட அமைவு, சுகாதார நிலை, முரண்பாடு, இயற்கை அனர்த்தம், கல்வி அறிவின்மை, உடற்குறைபாடு, நோய்கள் போன்றவை இதற்குக்காரணமாக இருக்கலாம். இவற்றின் விளைவாக கல்வி முறைமையில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் பின்வரும் மூன்று கேள்விகளுக்கு விடை காண வேண்டியது அவசியமானதாகும். .

I. சகலபிள்ளைகளும் சமூக மற்றும் அறிவாற்றல் திறன்களுடன் உரிய தேர்ச்சிகளைப் பெற்று ஆரம்பப்பாடசாலைகளுக்குள் பிரவேசிக்கின்றார்களா?

II. பாடசாலைகள், பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான கற்றல் சுற்றாடலை ஏற்படுத்துவதற்கு ஏற்ற வசதிகளை வழங்கத்தயாராக உள்ளனவா?

III. குடும்பங்களும், சமுதாயமும் தமது பிள்ளைகள் வீட்டிலிருந்து பாடசாலைக்கு தங்கு தடையின்றி சீராக நிலைமாறுவதற்கு (Transition) உதவத்தயாராக உள்ளனரா?

இவற்றிற்கு தீர்வாக "பாடசாலைத் தயார்நிலை" (School Readiness) என்ற எண்ணக்கரு முன்வைக்கப்படுகின்றது. இது இளம் பிள்ளைகளில் கற்றல் இடைவெளிகளை இல்லாதொழிப்பதுடன் கல்வியில் சமவாய்ப்பை (equity) வழங்கவும் வாழ்நாள் கற்றலுக்கு வழி ஏற்படுத்தி பூரண விருத்திக்கு உதவுவதாகவும் அமையும்.

### 2.1 பாடசாலைத் தயார்நிலை (School Readiness)

பாடசாலைத் தயார்நிலை என்பது மூன்று பரிமாணங்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்படுகின்றது. அவையாவன,

i. பிள்ளையின் ஆயத்தம் — Ready Children

ii. பாடசாலையின் ஆயத்தம் — Ready School

iii. குடும்பங்களின் ஆயத்தம் — Ready Family

பிள்ளைகள், பாடசாலைகள், குடும்பங்கள் தயாராக இருக்கும் போது ஒன்றுடன் ஒன்று இடைத்தொடர்புபடுவதுடன் பிள்ளைகள் முன் ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து தரம் 1 (ஆரம்பப் பாடசாலைக்கு) இற்குப் பிரவேசிக்கும் நிலை மாறுதல் சுமுகமாக (Smooth) இடம்பெறுவதுடன் உரிய தேர்ச்சிகளையும் திறன்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## i. பிள்ளைகளின் ஆயத்தம் (Ready Children)



பிள்ளையின் ஆயத்தம் என்ற முதலாவது பரிமாணமானது பிள்ளைகளின் கற்றலிலும் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்துகின்றது.



முன்பள்ளியில் இருந்து ஆரம்பப் பாடசாலையின் கற்றல் சுற்றாடலுக்கு வெற்றிகரமாக நிலைமாறுவதற்கு பிள்ளை ஒன்று எவற்றைத் அறிந்திருத்தல் வேண்டும்? அல்லது எவற்றைச் செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்? என்பவற்றை பிள்ளைகளின் ஆயத்த நிலை குறித்து நிற்கின்றது. பாடசாலையில் வெற்றி என்பது எழுத்தறிவு, எண்ணறிவு, அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கான ஆற்றல், சகப்பிள்ளைகளுடன் சேர்ந்து செயலாற்றல், கற்றலில் தன்னை ஈடுபடுத்தல் போன்றவை தொடர்பான நடத்தைகளினாலும் ஆற்றலினாலும் தீர்மானிக்கப்படும்.


## ii. பாடசாலை ஆயத்தம் (Ready School)



பாடசாலை ஆயத்தம் என்ற இரண்டாவது பரிமாணமாவதுபாடசாலைச்சுற்றாடலில் கவனம் செலுத்துகிறது. இது,

a) ஆரம்பப் பாடசாலைக்கும் அதற்கு அப்பாலும் பிள்ளைகள் சீராக (Smooth) நிலை மாறுவதற்கு உதவுகின்றது.

b) சகல பிள்ளைகளையும் கற்பதற்கு ஊக்குவிக்கின்றது.



பாடசாலை ஆயத்தம் என்பது பண்பு ரீதியாக முன் ஆரம்பப்பிள்ளைக் கல்விக்கும் ஆரம்பப்பாடசாலை சுற்றாடலுக்குமிடையே கற்றல் எதிர்பார்ப்பு களையும் தொடர்ச்சியையும் ஏற்படுத்துவதாக உள்ளது. இதன் இன்னுமொரு முக்கிய பண்பு வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையேயான கலாசாரப்பல்வகைமையினை (வேறுபாடுகளை) இல்லாதொழித்தல் ஆகும்.

பொதுவாக பாடசாலை ஆயத்தம் என்ற பரிமாணத்தில் பாடசாலைச் சுற்றாடலை தரமானதாக்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். பாடசாலைகள் ஆயத்தம் செய்ய வேண்டியவை. **(பின்னிணைப்பு 2.1)**

## iii. குடும்பங்களின் ஆயத்தம் (Ready Families)



குடும்பங்களின் தயார்நிலை என்ற மூன்றாவது பரிமாணமானது பாடசாலைக்கான குடும்பங்களின் தயார்நிலை எனக் கருதப்படும். குடும்பங்களின் தயார்நிலை என்பது பிள்ளைகளின் முன் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கற்றல் அபிவிருத்தி தொடர்பாகவும் ஆரம்பப் பாடசாலை ஒன்றிற்கு நிலை மாற்றுவது தொடர்பாகவும் பெற்றோர் கொண்டுள்ள மனப்பாங்கும்,ஈடுபாடும் ஆகும்.

பிள்ளைகளின் வெற்றிகரமான பாடசாலை நிலை மாற்றத்திற்குஅவசியமான அடிப்படைத் தேர்ச்சிகளைஅவர்களிடையே விருத்தியாக்குவதற்கு பெற்றோர்கள் தமது பிள்ளைகளை உரிய காலத்தில் பாடசாலையில் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இது பெற்றோரின் பிரதான கடமையும், பொறுப்புமாகும்.

பெற்றோர் செய்ய வேண்டியவை. **(பின்னிணைப்பு 2.2)**

நிறைவுரை:- வீட்டுச் சுற்றாடலில் இருந்து பாடசாலை என்ற புதியதொருசுற்றாடலுக்கு பிரவேசிக்கும் பிள்ளை ஒன்று இங்கே குறிப்பிட்ட நிலைமாறுதலை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.இதன் மூலம் பாடசாலைக்கல்வியிலும் அதற்கப்பாலான கல்வியிலும் பயனுறுதியுடன் பங்குபற்றுவதற்கான தயார்நிலையை பிள்ளை பெற்றிருக்கும்.பிள்ளைகளை பாடசாலைக்கு தயார்படுத்துவதிலும் இதற்காக குடும்பங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார்ப்படுத்துவதிலும் முன்பள்ளி ஆசிரியர்களினதும் முகாமைத்துவக்குழுக்களினதும் பங்களிப்பு அவசியமானதென இன்று நன்கு உணரப்பட்டுள்ளது. இதனால் சமூகக்குழுமமொன்றின் முன்பள்ளி முகாமைத்துவக்குழு வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் தொழிற்பட்டு அச்சமூகத்தின் கல்வி அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கு உந்துசக்தியாக விளங்கவேண்டும்.

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. பிள்ளை சார்ந்து முன்பள்ளித்தயார் நிலையின் பண்புகளை இனங்காணல். | புதிய ஆண்டில் முன்பள்ளிகள், ஆரம்ப பாடசாலைகள் ஆகியவற்றின் தயார்நிலையை பெற்றோர் விளங்கிக் கொள்வர். | படி 1 :- -அறிமுகம் - வீட்டிலிருந்து பிள்ளை ஆரம்ப பாடசாலை என்ற புதிய சுற்றாடலுக்கு புகும் போது நிலை மாறுதல் என்ற எண்ணக்கருவை கலந்துரையாடி விளக்குதல். | போஸ்டர் தாள் பல்லூடக எறியி, மாக்கர் நிறப்பேனாக்கள் காட்சிப்பட அட்டைகள் | கலந்துரையாடல் குழுவேலை | 3 மணித்தியாலம் | அவதானிப்பு |
| 2. பிள்ளை சார்ந்து பாடசாலைத் தயார் நிலையின் பண்புகளை இனங்காணல். | பிள்ளைகள் உரிய தேர்ச்சிகளை (புகுநிலைத்திறன்களை) பெற்றிருப்பார். | படி 2 :- பங்குபற்றுபவர்களை 6 குழுக்களாக்குதல். ஒவ்வொரு குழுவுக்கும் விடய ஆய்வுப் பிரதியை வழங்குதல். **(பின்னிணைப்பு 2.3)** | | | | |
| 3. பாடசாலை தயார் நிலையின் மூன்று பரிமாணங்களையும் (பாடசாலை, பிள்ளை, பெற்றோர்) விளங்கிக் கொண்டிருப்பர். | குடும்பங்கள் தமது பொறுப்பினை உணர்ந்து பிள்ளைகளை பாடசாலைக்கு ஆயத்தப்படுத்துகின்றார் கள். | படி 3 :- பங்குபற்றுநருடன் கலந்துரையாடி குடும்பத்தின் ஆயத்தம், பிள்ளையிடம் காணப்பட்ட ஆயத்தம், முன்பள்ளிகள் மேற்கொண்ட ஆயத்தம் போன்றவற்றை கலந்துரையாடி Flip Chat இல் எழுதுதல். | | | | |
| 4. பாடசாலைத் தயார்நிலையின் ஒவ்வொரு பரிமாணங்களினதும் இயல்புகளை விளங்கிக்கொள்வர். | முன்பள்ளி முகாமைத்துவக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் பிள்ளைகள் தயார்நிலையை அடைந்து கொள்வதற்கு உதவியளிப்பர். | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| | | படி 4 :- பாடசாலை தயார்நிலை 3 பரிமாணங்களை கொண்டுள்ளது என்பதை முன்வைத்தல்.<br>படி 5 :- மீண்டும் இரண்டு குழுக்களுக்கு 1 ஒப்படை வீதம் கீழே தரப்பட்ட ஒப்படைகளை வழங்குதல். (பின்னிணைப்பு 2.4)<br>படி 6 :- அளிக்கை செய்தல் கலந்துரையாடல்<br>படி 7 :- மீண்டும் கீழேயுள்ள ஒப்படைகளை வழங்குதல்.<br>1. பிள்ளைகளை ஏற்பதில் பாடசாலைகளில் ஆயத்தமானது எனப்பட்டியற்படுத்தல்.<br>2. பாடசாலைக்குப்புகும் பிள்ளைகள் கொண்டிருக்கவேண்டிய தேர்ச்சிகளை பட்டியற்படுத்தவும்.<br>படி 8 : ஒவ்வொன்றாக அறிக்கை தயாரித்தல்<br>படி 9 : அறிக்கை செய்தல்.<br>படி 10 : வளவாளரின் தொகுப்புரை | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 3

## முன்பள்ளிக் கல்வி முகாமைத்துவம் (Preschool Education Management)

### 3.1 அறிமுகம்

ஒரு கல்விக்கட்டமைப்பு அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் குறைந்தது இரு பரிமாணங்களை கொண்டிருக்கும். இதுமுறைசார், முறைசாரா நியமங்களையும் உள்ளடக்கியதாக அமையும். அத்துடன் நெகிழ்ச்சித்தன்மை உடையதாகவும் இருக்கும். சமூக மட்டத்திலிருந்து உயர்நிலை முகாமைத்துவக்குழு வரைக்கும் முகாமைத்துவ செயலொழுங்கு காணப்படும்.

முழுமையான மனித ஆளுமை விருத்திக்கும் சுதந்திரம், சமாதானம், சகவாழ்வு என்றவாறான உரிமைகளைப்பெற்றுக் கொள்வதற்குமாக அமைந்திருக்கும். முகாமைத்துவமானது கிடைக்கக்கூடிய வளங்களை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் உச்சமாகப்பயன்படுத்தி, இலக்குகளையும் குறிக்கோளையும் அடைந்துகொள்வதற்காக மனிதர்கள் மேற்கொள்ளும் முயற்சியை ஒருங்கிணைக்கும் ஒரு கருமத்தொடராகும். இந்தவகையில் முன்பள்ளி முகாமைத்துவக்குழுவும் தனக்குரித்தான கடமைக்கூறுகளை உரிய முறையில் விளங்கி கூட்டுப்பொறுப்புடன் முன்பள்ளிப்பிள்ளைகளின் எதிர்கால விருத்தி நோக்கியதாக செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற முறைமையே முன்பள்ளி முகாமைத்துவமாக கொள்ளமுடியும்.

மனித வாழ்வில் கற்றல் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. பல்வேறு கற்றல் விருத்திகளுக்கும் மழலைப்பருவமே அடித்தளமாகின்றது. இதில் முக்கியமான காலகட்டம் முன்பள்ளிகளுக்குள் அமைவதால் ஏனைய கல்வி செயல்முறைகளிலும் பார்க்க முன்பள்ளிக்கல்வியே முதன்மை பெறுகின்றது. இக்காலத்தில் உடல் உள விருத்திகள் வேகமாகவும் விவேகமாகவும் ஏற்படுகின்றன. குறிப்பாக 3–5 வயது வரைக்கும் பல்வேறு பயிற்சிகளின் மூலமாக இதனை அடையமுடிவதால் இதன் முக்கியத்துவம் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இவற்றை விளங்கி சரியாக அமுல்படுத்தவேண்டிய பொறுப்பு முகாமைத்துவக்குழுவுக்கும் உரியதாகும்.
இதில் முக்கியமான செயல் ஒழுங்குகள் பின்வருமாறு.

- கல்விச் செயற்பாடுகளை உரியமுறையில் இயக்குவதற்கு பொறுப்பாயிருத்தல்.
- கல்விச் செயற்பாடுகளைப் பேணிப்பாதுகாத்தலும்பராமரித்தலும்.
- அனைத்துக் கல்விச் செயற்பாடுகளுக்கும் தலைமைதாங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அனைத்தையும் ஒழுங்கமைத்து,செலலொழுங்குகளைக் கட்டுப்படுத்தல்.
- கட்டளைகளை உரிய முறையில் பிரயோகித்தல்
- சீரான மேற்பார்வை முறைமையை நடைமுறைப்படுத்தல்.
- வளங்களைப் பாண்டித்தியமுறச்செய்து உச்சபயனைப்பெறுதல்
- தீர்மானம் மேற்கொள்ளலும், வெளிப்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- சரியான தொடர்பாடலைப்பேணுதல்
- அனைத்தினையும் கையாளும் திறனைக் கொண்டிருத்தல்
- பிரச்சினையை விடுவிக்கும் ஆற்றலையும், ஆற்றுப்படுத்தும் நெறிமுறைகளையும் கையாளல்.
- நிலைபேறுடைய அபிவிருத்தியை நோக்கிச் செயற்படல்.

## 3.1 முகாமைத்துவக் குழுவின் பணிநிலை

- சிறந்த முகாமைத்துவக் கூறுகள் விருத்தி செய்யப்படும் போதுதான் முன்பள்ளிக் கல்விச்செயலொழுங்கு அபிவிருத்தி அடையமுடியும்.
- முன்பள்ளிக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக இதனுடன் தொடர்புறும் சகலரையும் உள்ளீர்த்தல் வேண்டும்.
- நாட்டின் எதிர்கால மனிதவள மேம்பாட்டுக்காக நிகழ்காலத்தில் விருப்புடனும் அர்பணிப்புடனும் செயற்படும் பணியணியினரைத் தோற்றுவித்து அவர்களில் இருந்து முகாமைத்துவக்குழு உறுப்பினர்களை இனங்காண வேண்டும்.
- ஐந்து வயதுக்குள்ளே துரிதமான உடல் உள வளர்ச்சியும் விருத்தியும் ஏற்படுகின்றன. இதனை நேர் சிந்தனையாக வளர்த்தெடுக்க வேண்டியது இக்குழவின் பொறுப்பாகும்.
- ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, தியாகசிந்தனை, தூரநோக்கு ஆகிய தன்மைகளுடன் தொடர்ச்சியான இயங்குநிலையை கொண்டிருத்தல் வேண்டும்.
- தலைமைத்துவத்தின் பொதுவான வழிகாட்டலை ஆராய்ந்து ஏற்றுக்கொண்டு அதன்வழி வினைத்திறனாகச் செயற்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. முன்பள்ளி ஆசிரியர் தொடர்பாகவும் அவரின் நாளாந்த, வாராந்த கற்றல், கற்பித்தல் செயலொழுங்கிற்கு வலுச்சேர்க்கக்கூடியதுமான செயற்பாடுகளை விளங்கிக் கொள்ளல். | முன்பள்ளி ஆசிரியர்களின் நாளாந்த வாராந்த செயற்பாடுகளினை அறிந்து முகாமைத்துவக்குழுவினர் அவர்களுக்கு உதவுபவர்களாக இருப்பர். | படி 1<br>குழுக்களாக்குதல்<br>படி 2<br>முன்பள்ளி ஆசிரியர்கள் பற்றி குழுக்கலந்துரையாடல்<br>படி 3<br>நாளாந்த ஆசிரியரின் செயற்பாடுகளை கலந்துரையாடி விளக்கம் பெறுதல்.<br>படி 4<br>வாராந்தக் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கினை விளங்குதல். | டிமையின் தாள்,<br>மாக்கர்,<br>வெளிப்படுத்துகை அட்டை | கலந்துரையாடல்<br>விரிவுரை<br>குழுவேலை | 30 நிமிடம் | முன்பள்ளி ஆசிரியர்களின் செயற்பாடுகள் பற்றி கூறுதல்.<br>கலந்துரையாடல் முறைமை<br>அவதானிப்பு<br>அவை முன்வைப்பினை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 2. மாணவரின் கற்றலுக்கும் ஆசிரியரின் கற்பித்தலுக்கும் முகாமைத்துவக் குழுவின் அவசியத்தை உணர வைத்தல். | - முன்பள்ளிக்கலைத் திட்டம் பற்றிய அடிப்படைகளை விளங்கியிருப்பர்.<br>- ஆசிரியரின் கற்பித்தலுக்கு பெற்றோர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்குவர்.<br>- முறைசார் பாடசாலைக் கல்விக்கான தயார்ப்படுத்தலின் படிமுறைகளை தெரிந்திருப்பர் | படி 1<br>பெற்றோருக்கு கலைத்திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பான விரிவுரை.<br>படி 2<br>முகாமைத்துவக் குழுவினர் பெற்றாரை எவ்வாறு கலைத்திட்டம் நோக்கி வழிப்படுத்த வேண்டும் என்பதை கலந்துரையாடல்<br>படி 3<br>கலைத்திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பான குழுக்கலந்துடையாடல்<br>படி 4<br>அவை முன்வைப்பும் அறிக்கையிடலும். | பல்லூடக எறியி<br>மாக்கர்<br>குறிப்புத்தாள் | விரிவுரை<br>கலந்துரையாடல் | 30 நிமிடம் | கலைத்திட்ட அடிப்படைகளை வினவுதல்.<br>குழுநிலையில் வினாக்களுக்கு விடையளிக்க வகை செய்துகொள்ளல்<br>வாய்மொழிக்கலந்து ரையாடல் வெளிப்படுத்துகை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 3. தார்மீக விழுமியங்களை மதித்தல் அனைவரதும் பன்முகத் தன்மைகளை ஏற்று பின்பற்றத்தக்க குடியியற் பண்புகளை விளங்கிச் செயற்படல். | - அனைவருக்கும் தரமான கல்வி என்னும் கோட்பாட்டினை (QualityEducation for all)விளங்கியிருப்பர்<br>- பிள்ளைகள் எல்லோரும் சமமானவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>- வீட்டுச்சுற்றாடல் தனியாள் வேறுபாடுகள் பற்றி விளங்கியிருப்பர்.<br>ஒவ்வொரு தனிநபருக்கான பல்வகைமையினை விளங்கிக்கொள்வர். | படி 1<br>யாவருக்கும் கல்வி பற்றிய உள்ளடக்கத்தை அடிப்படையாகக்கொண்ட விரிவுரை<br>படி 2<br>பங்குபற்றுநர்களை 6 குழுக்களாக்கி ஒரு தலைப்புக்கு இரண்டு குழுக்கள் வீதம் விடயப்பரப்பை வழங்கி கலந்துரையாடல்.<br>படி 3<br>அவைமுன்வைப்பு<br>படி 4<br>குறிப்பெடுத்து அறிக்கையிடல் | பல்லூடக எறியி<br>பக்கப்புரட்டி<br>டிமையின் தாள்<br>மாக்கர்<br>காண்பிய ஒளிக்காட்சிகள் (மாதிரி முன்பள்ளி பல்லின குழந்தைகள் பயில்களம்) | விரிவுரை<br>கலந்துரையாடல்<br>காண்பியங்களை அவதானித்தல் | 1 மணித்தியாலம் | அவதானித்துக் கொள்ளல்<br>வீட்டுச்சூழல் பற்றி குறுவினாக்கள் வினவுதல்<br>கலாச்சார பல்வகைமை பற்றிய கருத்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 04

## முகாமைத்துவக் குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும்

## (Duties and Responsibilities of Management Committee)

**4.1 அறிமுகம்**

ஓர் அமைப்பானது தனக்கென சுயாதீனமான முகாமையைக் கொண்டிருக்கும். அவ்வமைப்பின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் முகாமைத்துவத்தில் தங்கியுள்ளது. அந்தவகையில் கல்வி நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவச் செயற்பாடுகள் கல்வி முகாமைத்துவம் என வரையறுக்கப்படுகின்றது. இவ்வடிப்படையில் முன்பள்ளிக்கல்வி அமைப்பிலும் முன்பள்ளி முகாமைத்துவக்குழு உண்டு. முகாமைத்துவக்குழுவில் உள்ளவர்களுக்கு பல்வேறு கடமைகளும் பொறுப்புக்களும் உண்டு. முன்பள்ளி முகாமைத்துவ குழுவினர் தங்களது கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பில் தெளிவு பெற்றிருப்பதோடு அவற்றை நிறைவேற்றுவதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். தனித்தும்,குழுவாக இணைந்தும் செயலாற்ற வேண்டும். இவர்களுடன் பெற்றோரும், நடாத்தும் நிறுவனத்தினரும் சேர்ந்து செயற்படுவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 1. முன்பள்ளி முகாமைத்துவக்குழுவின் நிர்வாகப்பதவிகளையும் அவர்களை தெரிவு செய்யும் முறைகளையும் அவர்களுக்கான கடமைக்கூறுகளையும் விளங்கிக்கொள்ளுதல் | - முன்பள்ளிக் கட்டமைப்பை அறிந்து தமது பங்களிப்பினைச் செய்வர்<br><br>- முகாமைத்துவக்குழு யாப்பை விளங்கிக் கொள்வர்<br><br>- பொதுக்கூட்டங்கள், நிர்வாக சபைக்கூட்டங்கள், விசேட கூட்டங்கள் நடத்துவதையும் அதன் நடைமுறைகளையும் தெரிந்து கொள்ளுதல்.<br><br>- முன்பள்ளி முகாமைத்துவ செயல் ஒழுங்குக்கான அங்கத்துவ பணம், மாதாந்தக் கட்டணங்கள், விசேட நிதி அறவீடுகள், அன்பளிப்புக்கள் திரட்டல். இவற்றுக்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ளல் | படி 1<br>குழுக்கலந்துரையாடல் யாப்பை விளங்கிக்கொண்டு அளிக்கை செய்தல்<br><br>யாப்பிற்கு ஒத்திசையாமல் இருப்பின் அவை தொடர்பாக கலந்துரையாடுதல்<br>படி 2<br>பங்குபற்றுநர்களுக்கு முகாமைத்துவக் குழுவின் பொறுப்புக்கள் கடமைகளை அட்டைத்துண்டுகளில் எழுதி வழங்குதல்<br>படி 3<br>அவ் விடயங்களை கலந்துரையாடி பட்டியல்படுத்தல்<br><br>படி 4<br>பங்குபற்றுநர்களை குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் அட்டவணையில் குறிப்பிட்ட தலைப்பு ஒன்றை வழங்கி அதற்குரிய காட்சிப்படுத்திய அட்டைகளையும் கொடுத்து முன்பள்ளி முகாமைத்துவக்குழு யாப்பையும் ஒப்பிட்டு முழுமையான அறிக்கையினை போஸ்ரர் பேப்பரில் எழுதுதுல்<br>படி 5<br>ஒவ்வொரு குழுவும் தத்தமது அறிக்கையை முன்<br>வைத்தல் | பல்லூடக எறியி<br>மடிக்கணிணி<br>பக்கப்புரட்டி<br>போஸ்டர்<br>பேப்பர்<br>மாக்கர்<br>பெயின்ரிஸ்ரிக்<br>பிளனல்போட் | கலந்துரையாடல்<br>விரிவுரை | 45 நிமிடம் | அவதானிப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| 2. முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் தங்களது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கான திட்டமிடலை செய்திருப்பர் | - முன்பள்ளி செயற்பாடுகள் ஒழுங்காக, சிறப்பாக இடம்பெறும்.<br><br>- வினைத்திறனும், விளைதிறனும் கொண்ட முகாமைத்துவக் குழுவாக செயற்படுவர்.<br><br>- மாணவர் மேம்பாடடைந்த திறனைப்பெற்றிருப்பர்<br><br>- ஏனைய அமைப்புக்கள், சமூக அமைப்புக்களிடம் இவை தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் உதவிகளையும் பெற்றுக்கொள்வர். | படி 1<br>முன்பள்ளி தொடர்பான முக்கியமான செயற்பாடுகளை இனங்கானல்<br>படி 2<br>செயற்பாடுகளை வகைப்படுத்தி வெவ்வேறு தலைப்புகளுக்குள் உள்ளடக்குதல்.<br>படி 3<br>சரியான திட்டமிடலுக்கான அட்டவணையை பங்குபற்றுநரின் உதவியுடன் அமைத்தல். (மாதம், செயற்பாடுகள், செயற்பாட்டினை செய்வதற்கான பொறுப்பேற்பவர், தேவைப்படும் வளங்களும் (நிதி, ஆளணிகள்) பெற்றுக்கொள்ளும் வழிவகைகளும், தேவைப்படும் ஆலோசனைகள்)<br>படி 4<br>தலைப்புகளுக்கேற்ப திட்டமிடலை குழுக்களாக மேற்கொள்ளல்.<br>படி 5<br>திட்டமிடல்களை காட்சிப்படுத்தல் | | | 45 நிமிடம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 5

## முன்பள்ளி முகாமைத்துவ நிருவாகக் கட்டமைப்பு (Administrative Structure of Preschools Management )

முகாமைத்துவத்தின் வெற்றியானது சிறந்த நிருவாகக்கட்டமைப்பிலேயே தங்கியுள்ளது. பொருத்தமான இடஅமைவு, சூழல், ஆளணி மற்றும் இதரவளங்கள் சீராக ஒன்றிணைக்கப்படும் பொழுதும் சரியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் பொழுதும் முகாமைத்துவம் பயனுறுதி மிக்கதாக அமையும். முன்பள்ளி முகாமைத்துவமானது தனக்குரித்தான தூரநோக்கினையும் பணிக்கூற்றையும் தெளிவான நோக்கங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அவை குறித்தகால இலக்கினுள் எய்தப்படக்கூடியவையாக நிருவாகப்பொறிமுறை தொடரொழுங்கைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு நாட்டின் கல்விச்செயல்முறையில் முன்பள்ளி முகாமைத்துவத்தின் பங்கு அளப்பரியதாகும். முன்பள்ளியில் உயர்மட்டத்தில் இவை கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

வீட்டுச்சூழலோடு மிக நெருக்கமான தொடர்பைக்கொண்ட முன்பள்ளிச்செயற்பாடுகள் சரியான நிர்வாகக் கட்டமைப்பில் நெறிப்படுத்தப்படல் வேண்டும். நியமம்சாராத கல்வியோடு தொடர்புடைய பல பணிகளை முன்பள்ளி முகாமைத்துவக்குழுக்களே செய்கின்றன. இவ்வாறான பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு தேவையான அறிவு அனுபவ வளவிருத்திகளை காலத்திற்கு காலம் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| முன்பள்ளி முகாமைத்துவத்தின் கட்டமைப்பினை விளங்கிக்கொண்டு தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவர். | முன்பள்ளிக் கட்டமைப்பினை அறிந்து தமது பங்களிப்பினைச் செய்வர். | படி 1<br>அறிமுகம்<br><br>முன்பள்ளி முகாமைத்துவக்குழுவின் நிருவாகக் கட்டமைப்பு பற்றிய விளக்கம்<br>படி 2<br>பங்குபற்றுநர்களுக்கு அட்டைத்துண்டுகளை வழங்கி முகாமைத்துவக்குழுவின் பொறுப்புக்கள் / கடமைகள் ஒன்றுவீதம் எழுதிகாட்சிப்படுத்தல்<br>படி 3<br>குழுவாக காட்சிப்படுத்திய விடயங்களை கலந்துரையாடலும் பட்டியல்படுத்தலும்<br>படி 4<br>ஒவ்வொரு குழுவும் தத்தமது அறிக்கையை முன்வைத்தல் | பல்லூடக எறியி<br>மடிக்கணணி<br>பக்கப்புரட்டி<br>போஸ்டர்<br>பேப்பர்<br>மாக்கர்<br>பெயின்ரிஸ்ரிக்<br>பிளனல்போட் | கலந்துரையாடல்<br>விரிவுரை | 3 மணித்தியாலம் | அவதானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் நிர்வாகப்பதவிகளை யும் அவர்களை தெரிவு செய்யும் முறைகளையும் விளங்கிக்கொள்ளுதல் | வினைத்திறனும், விளைதிறனும் கொண்ட முகாமைத்துவக் குழுவாக செயற்படுவர் | படி 1<br>முகாமைத்துவக்குழுவின் நிர்வாக பதவிகளை நியதிச்சட்டத்திற்கு அமைவாக வரிசைப்படுத்துதல்<br>முன்பள்ளிக்கான முகாமைத்துவ கட்டமைப்புப் தெரிவில் கலந்துகொள்ளக்கூடிய வர்களின் தகைமைகளை விளங்கிக்கொள்ளல்.<br>படி 2<br>- பங்குபற்றுநரை 6 குழுக்களாகப்பிரித்தல் (தலைவர், செயலாளர், பொருளாளர்களின் செயற்பாடுகள்)<br>- குறித்த ஒரு தலைப்பை 2 குழு வீதம் வழங்கல்<br>- ஒத்த விடயங்களை கலந்துரையாடிய குழு உறுப்பினர்களை ஒன்று சேர்த்து பட்டியல்படுத்தல்.<br>படி 4<br>ஒவ்வொரு குழுவும் தொகுப்புரை வழங்கல் | பல்லூடக எறியி<br>மடிக்கணணி<br>பக்கப்புரட்டி<br>போஸ்டர்<br>பேப்பர்<br>மாக்கர்<br>பெயின்ரிஸ்ரிக்<br>பிளனல்போட் | கலந்துரையாடல்<br>விரிவுரை | 3<br>மணித்தியாலம் | அவதானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| | | படி 5<br>தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், உப செயலளர் ஆகிய பதவி நிலைக்குரியவர்களின் கடமைக்கூறுகளை காட்சிப்படுத்தல் | | | | |
| வினைத்திறன் உள்ள முகாமையாளர்களாக செயற்படுவர். | முன்பள்ளி தொடர்பான அனைத்துச்செயற் பாடுகளும் மேம்படும்.<br><br>முகாமையாளர்களின் மேம்படுத்தல் தொடர்பான திட்டமிடல். | படி1<br>உரியபொறுப்புக்களுக்குரிய தகைமைகளை கலந்துரையாடி அட்டவணைப்படுத்தல்<br>படி 2<br>தகைமைகளை மேம்படுத்துவதற்கான உத்திகளை கலந்துரையாடி விளங்கிக்கொள்ளல்.<br>படி 3<br>கலந்துரையாடி பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் ஒரு திட்டமிடலைச் செய்தல். | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 6

## முன்பள்ளிகள் கொண்டிருக்க வேண்டிய ஆகக்குறைந்த தரங்கள் (Minimum Standards of Preschools)

### 6.1 அறிமுகம்

வடக்கு மாகாண, மாகாண சபையால் 2015ம் ஆண்டு ஜீன் மாதம் 9ம் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2015ம் ஆண்டின் 02ம் இலக்க முன்பள்ளிகளின் நியதிச்சட்டமானது வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளை அறிமுகம் செய்வதற்கும் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான நியதிச்சட்டத்தின் அடிப்படையிலேதான் இந்த அலகு முக்கியம் பெறுகின்றது. முன்பள்ளிகள் கொண்டிருக்கவேண்டிய ஆகக்குறைந்த தராதரங்கள் என்ற விடயங்கள் முன்மொழியப்பட்டுள்ளது. சிறந்த முன்பள்ளிகளை உருவாக்குவதுடன் உடல், உள, சமூக, ஆன்மீக ரீதியான ஆரோக்கியம் மிகுந்த பிள்ளைகளை ஆரம்பப்பாடசாலைக்கு தயார்படுத்தவல்ல பல்வேறு முக்கிய விடயங்களைக் கொண்டமைந்துள்ளமை சிறப்பான விடயமாகும்.

முன்பள்ளிக் கல்வியினுடைய இலக்குகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிர்வகித்தல் முதலான குறிக்கோள்களின் அடிப்படையில் முன்பள்ளிகள் கொண்டிருக்கவேண்டிய ஆகக்குறைந்த தரங்கள் என்ற தலைப்பு இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

வடக்கு மாகாணத்திற்குள் நிறுவப்பட்டுச் செயற்படுத்தும் ஒவ்வொரு முன்பள்ளியும் இதன் கீழ் தரப்பட்டுள்ள ஆகக்குறைந்த தரங்களையாவது கொண்ட பௌதீக உட்கட்டுமானங்கள், ஏனைய வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை முகாமைத்துவக்குழுவினர், பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமூகமும் இணைந்து ஏற்படுத்தி முன்பள்ளிகளின் நிலைபேற்றுக்கு உதவவேண்டும் என்பது மிகப்பிரதான பணியாகவே கருதப்படுகின்றது.

- முன்பள்ளிக் கல்வியினை மேம்படுத்தல்
- சிறப்புத்தேவையுடையோரின் தேவைகளை நிறைவேற்ற உதவுதல்.
- முன்பள்ளி ஆசிரியர்களின் இயலளவை தரமுயர்த்தல்.
- அனைத்து முன்பள்ளிக்குமான நிர்வாக ரீதியானவையும், முகாமைத்துவ ரீதியானவையுமான நியமங்களை நிர்ணயித்தல்.
- முன்பள்ளிக் கட்டுமானங்கள் மற்றும் ஏனைய வசதிகளுக்கான நியமங்களை நிர்ணயித்தல்.

மாதிரி முன்பள்ளிகளை உருவாக்குதல் போன்ற இலக்குகளை நோக்கியே மேற்படி விடயம் முன்வைக்கப்பட்டுள்ளமை தெள்ளத் தெளிவாக எம்மால் உணரக்கூடியதாக உள்ளது. இதனடிப்படையில் பின்வரும் விடயங்களில் முன்பள்ளி மூன்று கொண்டிருக்கவேண்டிய ஆகக்குறைந்த தராதரங்கள் பற்றி நோக்கப்படல் வேண்டும்.

1. அமைவிடம்
2. முன்பள்ளிகளைப் பதிவு செய்தல்
3. முன்பள்ளி ஆசிரியர்களைப் பதிவு செய்தல்
4. ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்
5. குற்றங்கள் மற்றும் தண்டனைகள்
6. கட்டடங்கள், தளபாடங்கள் மற்றும் ஏனைய சாதனங்கள்
7. சுத்தமும், போஷாக்கும்
8. கல்வியும், உள சுகாதாரமும்
9. உள சமூகச்சூழல்
10. நிர்வாக ஆவணங்கள்
11. நாளாந்த வேலைத்திட்டம்
12. பெற்றோர் மற்றும் நிர்வாக ஆதரவு
13. முன்பள்ளி ஆசிரியர் தேவைகள்
14. உதவியாளர் பங்களிப்பு

ஒவ்வொரு முன்பள்ளியும் எவ்வாறு முறைப்படியாகவும், வினைத்திறனுடையதாகவும் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதனை முகாமைத்துவ தராதரங்கள் குறிப்பிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உப அலகு 01 :- முன்பள்ளி ஒன்றின் அமைவிடமும் முன்பள்ளி ஒன்று கொண்டிருக்கவேண்டிய கட்டட அமைவு, தளபாடங்கள் போன்றவற்றின் நியதிகளைக் கண்டறிதலும்.**

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| முன்பள்ளி ஒன்றின் அமைவிடம் பற்றிய எண்ணக்கரு விளக்கத்தை பெறுவர்.<br><br>முன்பள்ளி ஒன்றை அமைப்பதில் சாதகமான மற்றும் பாதகமான நிலைமைகள் பற்றி அறிவர்<br><br>முன்பள்ளிக் கட்டடம் எவ்வாறு அமையவேண்டும் என அறிந்துகொள்வர். | முன்பள்ளி அடைவிடம் மற்றும் கட்டடம், விளையாட்டு முற்றம், முதலியன பற்றியறிந்திருப்பர். முன்பள்ளி அமையக்கூடிய இடங்களை அடையாளங்கண்டிருப்பர்<br><br>- முன்பள்ளிக்குச் சாதக மற்றும் பாதகமான சுற்றாடலை இனங்கண்டிருப்பர்.<br>- முன்பள்ளியொன்றின் அடைவிடம் பற்றி முழுத்தெளிவு பெற்றிருப்பர். | படி 1<br>பங்கு பற்றுநர்களைக் குழுக்களாக்குதல்<br>படி 2<br>- முன்பள்ளியொன்று அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் எனக் கருதுபவை எவை?<br>- முன்பள்ளி அமைவிற்குப் பாதகமான சூழல் எவை என இனங்கண்ட விடயங்கள் எவை?<br>- முன்பள்ளிக் கட்டிடங்கள் தொடர்பாக அறிந்த விடயங்களைப் பட்டியல்படுத்தல்<br>- முன்பள்ளிக் குழந்தைகள் பயன்படுத்தத்தக்க தளபாடங்கள் எவ்வாறு அமையவேண்டும்.<br>போன்ற தலைப்புக்களை வழங்கி எழுத வழிப்படுத்தல்.<br>படி 3<br>எழுதுவதற்கும் விளக்கமளித்தலுக்கும் உதவுதல்.<br>படி 4<br>முன்வைப்பும்,கலந்துரையாடலும்.<br>படி 5<br>தொகுப்புரையும், நிறைவும். | பேப்பர்,<br>நிறப்பேனா,<br>மாக்கர்,<br>டிமைன் தாள்,<br>எழுதுகருவி<br>எழுதும்தாள் | குழுக்கலந்துரையாடல்<br>வினாவுதல்,<br>குழுவேலை,<br>முன்வைப்பு | 45 நிமிடம் | அவதானம்,<br>அறிக்கைகள்,<br>முன்வைப்பு. |
| முன்பள்ளிப்பிள்ளை தளபாடங்கள் பற்றிய அறிவைப்பெறுவர். | தளபாடங்களின் பொருத்தப்பாட்டினை விளங்கித்தெரிவு செய்யும் திறனைப் பெற்றிருப்பர். | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உப அலகு 02 :- முன்பள்ளி பிள்ளைகளது அடிப்படைவசதிகள் பற்றிய ஆரோக்கிய நிலையை கட்டியெழுப்ப உதவுதல்.**

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| முன்பள்ளிபிள்ளை களைது அடிப்படைத்தேவைகள் பற்றி விளங்கிக்கொள்வர். | பிள்ளையின் அடிப்படைத்தேவைகளை அறிந்து வெளிப்படுத்துவர். | படி 1<br>பங்குபற்றுநரை குழுக்களாக்குதல்<br>படி 2<br>முன்பள்ளிக் குழந்தைக்குப் போஷாக்கினை வழங்கும் உணவுகளைப் பட்டியல்படுத்துக.<br>- கொதித்தாறியநீர் குழந்தைகளுக்கு வழங்குவதால் ஏற்படும் ஆரோக்கிய நிலமைகளை இனங்கண்டு அட்டவணைப்படுத்துக?<br>- போஷாக்குக் குறைபாடு, குடிநீர்ப்பிரச்சினை என்பவற்றால் முன்பள்ளிக் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பட்டியற்படுத்தல்.<br><br>போன்ற தலைப்புக்களை வழங்கி அறிக்கை எழுத வழிப்படுத்தல்<br>படி 3<br>முன்வைப்பு<br>படி 4<br>வளவாளர் தொகுப்புரையும் மேலதிக விளக்கங்களையும் வழங்கி நிறைவு செய்தல். | எழுதுகருவிகள், டிமைன் தாள். | குழுவேலை, கலந்துரையாடல் , முன்வைப்பு | 30 நிமிடம் | அவதானம். |
| குழந்தைகளது போஷாக்கு நிலைக்கு ஏற்ப உணவு வழங்கவேண்டும் என்பதை அறிந்துகொள்வர். | போஷாக்கான உணவு குழந்தையின் வளர்ச்சி விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை விளங்கியிருப்பர். | | | | | |
| சுகாதாரமாக குடிநீர் வழங்கலை உறுதிப்படுத்துவர். | சுத்தமான குடிநீர் வழங்குவதன் மூலம் குழந்தைகளை நோய் நிலையில் இருந்து பாதுகாக்கலாம் என்பதை அறிந்திருப்பர். | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.4 உபஅலகு 03 :- முன்பள்ளியொன்றில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் பற்றிய அறிவைப்பெறல்**

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| பயன்படுத்தப்படும் ஆவணங்கள் பற்றித் தெரிந்து கொள்வர். | முன்பள்ளி ஆவணத்தரவுகளின் தரவுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை முறையாகப் பயன்படுத்தவும் பாதுகாக்கவும் திறனைப் பெற்றிருப்பர். | படி 1<br>பங்குபற்றுநர்களைக் குழுக்களாக்குதல்<br>படி 2<br>முன்பள்ளியில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் தொடர்பாக ஒவ்வொன்று எழுதவும், முன்வைக்கவும் வழிப்படுத்தல்.<br>படி 3<br>வளவாளர் முன்பள்ளியில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் பற்றிய விளக்கத்தையும், தகவல்களையும் வழங்குதல்.<br>படி 4<br>தொகுப்புரையும், நிறைவும். | எழுதுகருவி களும், காகிதாதிகளும் | குழுவேலை, கலந்துரையாடல் முன்வைப்பு | 30 நிமிடம் | அவதானம். |
| தரவுகளை அன்றாட செயற்பாடுகளுக்கு பயன்படுத்துதல். | தமது செயற்பாடுகளை ஆவண ரீதியாக உறுதிப்படுத்தும் தேர்ச்சியைப் பெற்றிருப்பர். | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.5 உப அலகு 04 முன்பள்ளி ஆசிரியரை நியமித்தலும் ஆசிரியர் தரங்களை இனங்காணலும்.**

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய கல்வித்தரம் பற்றிய அறிவு பெறுவர். | ஆசிரியரைத் தரமான முறையில் தெரிவு செய்வர் | படி 1<br>முன்பள்ளி ஆசிரியர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது.<br>- முன்பள்ளி ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய உளரீதியான பண்புகள் எவை?<br>- ஆசிரியர்களது கடமைகளையும்,பொறுப்புக் களையும் அட்டவணைப்படுத்துக<br>- முன்பள்ளி ஆசிரியர்களது கொடுப்பனவு தொடர்பாக நீங்கள் அறிந்த விடயம் யாது?<br>போன்ற வினாக்களை வழங்கி அவர்கள் விடையெழுத வழிப்படுத்தல்<br>படி 2<br>அவற்றைத் தொகுத்து மேலதிக உள்ளடக்கங்களோடு கலந்துரையாடி நிறைவு செய்தல். | எழுதுகருவி களும், காகிதாதிகளும் | குழுக்கலந்துரை யாடல், விரிவுரை, முன்வைப்பு | 30 நிமிடம் | அவதானம் மதிப்பீடு |
| பொருத்தமான ஆசிரியரை நியமிக்கும் திறன் பெறுவர். | பொருத்தமான ஆசிரியரை பெற்றிருப்பர். | | | | | |
| ஆசிரியருக்கு வழங்கப்படும் வேதன நிலைமையை விளங்கிக்கொள்வார். | ஆசிரியர் வேதனம் பற்றி அக்கறை கொள்வார் | | | | | |
| ஆசிரியர் பொறுப்புக்கள், கடமைகளை விளங்கிக் கொள்வர் | ஆசிரியரது செயற்பாடுகளை அவதானித்து மதிப்பிடுவார். | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 7

## முன்பள்ளிக்கல்வி கலைத்திட்ட அறிமுகம் (Introduction of Preschool Curriculum)

**அறிமுகம் :-**

பிள்ளையொன்றின் எதிர்கால விருத்தி முதல் 5 வருடங்களும் தீர்க்கமானவையாகவும், முக்கியமானவையாகவும் உள்ளன என்ற வகையில் 6 வயதுக்கு முன் பிள்ளை பெற்றுக்கொள்ளும் கற்றல் அனுபவங்கள் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு பிள்ளைக்கு முன்பராயத்தில் கிடைக்கும் போதுமான அறிவானது முறையான பாடசாலைக்கல்வியில் அப்பிள்ளையின் வெற்றியை எதிர்கொள்ள உதவும். தாயின் கருவறையிலிருந்தே பிள்ளைகளுக்கு அனுபவக் கற்றல் ஆரம்பமாகின்றது. மூளைக்கலங்களுக்கிடையிலான தொடர்புப்பிணைப்புக்கள் விருத்தியடையவும் வலுவடையவும் செயற்பாடு முறையான கற்றல் அனுபவங்கள் கிடைக்கும் வகையிலும் இன்றைய உலக நடைமுறைக்கு அமைய முன்பள்ளிக் கலைத்திட்டம் அமைதல் வேண்டும். இதற்கமைய வடமாகாணத்திற்கென வெளியிடப்பட்ட "விளையாடுவோம் கற்போம்" என்ற ஆசிரியர் கைந்நூல் சகல ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் பாவிக்கும் கற்றல், கற்பித்தல் சாதனங்கள் அல்லது உபகரணங்கள் எப்பொழுதும் தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும். இச்செயற்பாடுகளை முகாமைத்துவக்குழுவினர் பெற்றோர்கள் அறிந்து ஆசிரியர்களுக்கு உதவுவார்கள். மற்றும் வீட்டை அடிப்படையாகக் கொண்டகல்விக்கு வழிவகுக்கின்றது. எனவே பெற்றோர்கள் முன்பள்ளி ஆசிரியருக்கு துணையாகவும், பங்களிப்புச்செய்யவும் மற்றும் முன்பள்ளி அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| முன்பள்ளி கலைத்திட்டத்தை விளங்கிக்கொள்ளல் | முன்பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தலுக்கும் கலைத்திட்ட அமுலாக்கத்திற்கும் கற்பித்தலுக்கும் உதவுவர்.<br>முகாமைத்துவக்குழுவினர் ஆதரவு வழங்குவர்.<br><br>பெற்றோர்கள் கலைத்திட்டத்திற்கு ஏற்றவகையில் தமது பிள்ளைகளை வீட்டிலும் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வர். | படி 1<br>அறிமுகம்<br>மூளையின் துரித செயற்பாட்டுக் காலத்தில் மூளையில் நடைபெறும் மாற்றங்கள் / செயல்கள் ஒளிப்படம் காண்பித்தல்<br>படி 2<br>பங்குபற்றுநர்களை நான்கு குழுக்களாக்கி தத்தமது அனுபவங்களைக் கலந்துரையாடி ஒவ்வொரு குழுவிலும் ஒருவரின் அனுபவத்தை சபை முன் கூற வாய்ப்பளித்தல்<br>படி 3<br>தொகுப்புரை<br>முன்பள்ளியின் செயற்பாட்டு அனுபவங்கள் தமது வாழ்க்கையை வளம்படுத்தியதை வலியுறுத்தல். | மல்ரி மீடியா, மடிக்கணினி, போஸ்ரர் பேப்பர், பிளனல் போட், பிறிஸ்ரல் போட், கத்தரிக்கோல், வைட்போட் மாக்கர், பெயின்ரிஸ் ஸ்ரிக், தம்பின், சலோரேப், ஒளிப்படங்கள் | குழுமுறை, கலந்துரையாடல் அளிக்கை, காட்ஸ், ஒளிப்படம் | 20 நிமிட | அவதானித்தல் அறிக்கை செய்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| நவீன கல்விசார் முறைமைகளை கண்டறிதல். | நவீன கல்வி உலகிற்கேற்ப (இன்றைய உலகம்) பிள்ளைகளை தயார்படுத்தல். | **படி 1அறிமுகம்**<br>உலகமயமாதல் என்றால் என்ன? அதற்கும் எமக்குமுள்ள (முன்பள்ளி) தொடர்பு என்ன?<br>**படி 2**<br>கலந்துரையாடல்<br>**படி 3**<br>தொகுப்புரை<br>கற்றல் - கற்பித்தல் செயல் அனுபவங்களாகவும், நவீனத்துவம் கொண்டதாகவும், ஆளுமையுள்ளவர்களாகவும் இருக்க வலியுறுத்தல் | மல்ரி மீடியா, மடிக்கணினி, போஸ்ரர் பேப்பர், பிளனல் போட், பிறிஸ்ரல் போட் கத்தரிக்கோல், வைட்போட் மாக்கர், பெயின்ரிஸ் ஸ்ரிக், தம்பின், சலோரேப், ஒளிப்படங்கள் | குழுமுறை, கலந்துரை யாடல் அளிக்கை, காட்ஸ், ஒளிப்படம் | 20 நிமிடம் | அவதானித் தல் அறிக்கை செய்தல். |
| ஒவ்வொரு பாடப்பரப்புக்குமானசெ யற்பாடுகளை இனங்கானல். | முன்பள்ளி பாடப்பரப்புக்களை இனங்காண்டு அவற்றுக்கான உதாரணச் செயற்பாடுகளை அறிதிருப்பர். | **படி 1**<br>**அறிமுகம்**<br>பிள்ளையின் அனுபவக் (செயல்முறை) கற்றலின் முக்கியத்துவம்<br>ஒன்றிணைந்த பாடமாகக் கற்றல் - கற்பித்தல் நிகழ்வுகள்<br>**படி 2**<br>பங்குபற்றுநர்களுக்கு முன்பள்ளி கற்றல் செயற்பாடுகள் சிலவற்றை அட்டைத்துண்டுகளில் எழுதி வழங்குதல் | மல்ரி மீடியா, மடிக்கணினி, போஸ்ரர் பேப்பர், பிளனல் போட், பிறிஸ்ரல் போட், கத்தரிக்கோல், வைட்போட் மாக்கர், பெயின்ரிஸ் ஸ்ரிக், தம்பின், சலோரேப், ஒளிப்படங்கள் | குழுமுறை, கலந்துரை யாடல் அளிக்கை, காட்ஸ், ஒளிப்படம் | 30 நிமிடம் | அவதானித் தல் அறிக்கை செய்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| | | படி 3<br>அவற்றைக் கலந்துரையாடல்.<br>படி 4<br>தொகுப்புரை | | | | |
| ஒவ்வொரு பாடப்பரப்பையும் இனங்காணல். | ஒவ்வொரு பாடப்பரப்பை இனங்காணலும் அவற்றுக்கான உதாரண செயற்பாடுகளை செய்தலும் | படி 1<br>பங்குபற்றுநர்களை 4 குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவுக்கும் பாடரீதியாக ஒவ்வொரு செயற்பாடு வழங்குதல், தயார்ப்படுத்தல்<br>படி 2<br>ஒவ்வொரு குழுவும் தத்தமது செயற்பாடுகளை செய்து காட்டல்<br><br>ஒவ்வொரு செயற்பாடுகள் முடிவில்கலந்துரையாடல்.<br>படி 3<br>தொகுப்புரை உடல் உளச் செயற்பாடுகள் சிந்தனை, தர்க்கித்தல், தீர்மானமெடுத்தல்,போன்றன அனுபவரீதியாக பிள்ளைகள் பெறுவதை உறுதிப்படுத்தல் | மல்ரி மீடியா, மடிக்கணினி, போஸ்ரர் பேப்பர், பிளனல் போட், பிறிஸ்ரல் போட், கத்தரிக்கோல், வைட்போட் மாக்கர், பெயின்ரிஸ் ஸ்ரிக், தம்பின், சலோரேப், ஒளிப்படங்கள் | குழுமுறை, கலந்துரை யாடல் அளிக்கை, காட்ஸ், ஒளிப்படம் | 1.20 நிமிடம் | அவதானித் தல் அறிக்கை செய்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடு | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| முன்பள்ளிக்கல்வியின் செயற்திறன் ஆரம்பகல்வி தரம் 1 இல் கொண்டுள்ள செயற்திறன் தாக்கத்தை இனங்காணல். | முன்பள்ளி கற்றல் செயற்பாடுகள் தரம் 1 கல்விக்கு உதவுகிறது என அறிதல் | படி 1<br>வளவாளர் தரம் 1 கலைத்திட்ட விடயங்கள் சிலவற்றை பல்லூடக எறியி மூலம் முன்வைத்து கலந்துரையாடல்<br>படி 2<br>தொகுப்புரை ஆரம்பக்கல்வி கற்றலுக்கான செயல் மூல கற்றல் அனுபவங்கள் முன்பள்ளி கல்வியூடாக கிடைக்கின்றது. தரம் 1 ஆசிரியர்கள் முன்பள்ளி ஆசிரியர் செயலமர்வின்போது தரம் 1 ஆசிரியர் கூறிய விடயங்களை கூறுதல் (ஒளிப்படங்கள்) | மல்ரி மீடியா, மடிக்கணினி, போஸ்ரர் பேப்பர், பிளனல் போட், பிறிஸ்ரல் போட் கத்தரிக்கோல், வைட்போட் மாக்கர், பெயின்ரிஸ் ஸ்ரிக், தம்பின் சலோரேப், ஒளிப்படங்கள் | குழுமுறை, கலந்துரையாடல் அளிக்கை, காட்ஸ், ஒளிப்படம் | 15 நிமிட | அவதானித்தல் அறிக்கை செய்தல் |
| வீட்டை அடிப்படையாக கொண்டகல்விச் செயற்பாடுகளை இனங்காணல். | வீட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் விடயங்களை பட்டியற்படுத்தப்பட்டிருக்கும். | படி 1<br>முன்னைய செயற்பாடுகளை ஞாபகப்படுத்தி வீட்டுச் செயற்பாடுகளை உதாரணம் மூலம் கூறுதல்<br>படி 2<br>பங்குபற்றுநர்களுக்கு அட்டைத்துண்டு வழங்கி வீட்டில் செய்யக் கூடிய செயற்பாடுகளை எழுதி காட்சிப்படுத்தல்<br>படி 3<br>கலந்துரையாடி தொகுத்துக் கூறல் | | | 15 நிமிடம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 8

## சிறுவர் உரிமைகளும் பாதுகாப்பும் (Child Rights and Protection)

### 8.1 அறிமுகம்

இன்றைய சிறுவர்களின் வளர்ச்சி, அவர்களின் வாழ்வு என்பவற்றில் அனைவருமே கரிசணை காட்டுவது அவசியமாகும். பலவேளைகளில் பல படிகளிலே சிறுவர்களின் தேவைகள், பெரியவர்களின் மூலம் நிறைவு செய்யப்பட வேண்டியதாகும். இன்றைய நாட்களில் சிறுவர்கள் இலகுவில் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் அநாதரவானவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு சிறப்பான பாதுகாப்பும் பராமரிப்பும் அவசியமாகும். சிறுவர் வாழும் சமுதாயத்தின் கலாச்சார பண்புகளை கனம் பண்ணுவதும் சமூக இயைபாக்கத்தை பெறுவதும் அவசியமாகும். அத்துடன் சர்வதேச ஒத்துழைப்பைப் பெறும் வகையில் சிறுவர் சிறுமியர் உரிமைகளை ஈட்டிக்கொடுப்பதில் சிறுவர்களின் வளர்ச்சியிலும் வாழ்விலும் அக்கறை கொண்டவர்களான பெற்றோர் சமூகம் என்பவை முதலிடம் பெறுகின்றன எனலாம். எனவே சிறுவர்களின் உரிமை அவர்களின் பாதுகாப்புப்பற்றிய அறிவும் அவை சார்ந்த முன்னெடுப்புக்களும் முயற்சியும் முன்பள்ளிச்சமூகத்தின் தேவையாகும். அந்தவகையில் சிறுவர் உரிமை பாதுகாப்பு பற்றிய அறிவு இன்றியமையாதது ஆகும்.

சகல பிள்ளைகளும் பாதுகாப்பை பெறுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். குடும்பமே பிள்ளைகளின் முதனிலை பாதுகாப்புக்குப் பொறுப்புடையதாகும். பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான வீட்டுச்சுற்றாடலை உருவாக்கவேண்டிய பொறுப்புடையவர்களாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் உள்ளனர். பிள்ளையின் வீட்டுக்கு வெளியே பிள்ளைக்கு பாதுகாப்பானதும் பிள்ளை நேயமுமான சுற்றாடலை விருத்தியாக்க வேண்டிய பொறுப்பு முன்பள்ளிக்கும் சமூகத்திற்கும் உள்ளது. குடும்பத்திலும் முன்பள்ளியிலும் சமூகத்திலும் பிள்ளைகள் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதன் மூலம் பிள்ளைகள் முழு அளவில் வளர்ச்சியடைவதற்கும் கற்பதற்குமான சந்தர்ப்பம் கிடைக்கபபெம்.

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| சிறுவர்கள் எனப்படுபவர்கள் யார் என்பது தொடர்பான தெளிவினைப் பெற்றிருத்தல் | ஐக்கியநாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 18 வயதுக்கு உட்பட்ட யாவரும் சிறுவர்கள் எனவும் உள்நாட்டு சட்டத்தின் அடிப்படையில் சிறுவர்கள் யார் என்பதையும் விளங்கியிருப்பர். | படி -1<br>அட்டையை கொடுத்து சிறுவர்கள் என்பவர்கள் யார் என்பதையும் அவர்களின் வயதெல்லையையும் குறிப்பிட வைத்தல்.<br>படி - 2<br>வயதெல்லை குறித்த மேலதிக விளக்கங்களையளித்தல் | சம்பவக் குறிப்புகள், பல்ஊடகத்தெறிகருவி காகித அட்டைகள் டிமைத் தாள், எழுதுகருவிகள் | கலந்துரையாடல்<br>குழு வேலை<br>விரிவுரை | 2 மணித்தியாலம். | அவதானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிறுவர்களின் உரிமைகளையும் தேவைகளையும் அறிந்து அவற்றை சிறுவர்கள் பெறும் அனுபவிக்கும் வகையில் உதவுதல். | சிறுவர்களின் உரிமைகள் குறித்த பூரண அறிவைப்பெற்றிருப்பதுடன் அவர்களின் செயற்பாடு தொடர்பாகவும் முன்னெடுப்பர். | குழுக்களாகப் பிரித்தல்<br>படி - 3<br>பங்குபற்றுனர் அறிந்த,தெரிந்த சிறுவர் உரிமைகளை கலந்துரையாடல் மூலம் காட்சிப்படுத்தல்<br>படி - 4<br>சிறுவர் உரிமைகள் தொடர்பான உறுப்புரைகளைக் கொடுத்து வாசித்து விளங்கி வெளிப்படுத்தல் | | | | |
| சிறுவர் உரிமை தொடர்பான பிரதான கோட்பாடுகளை அறிந்து நடைமுறைப்படுத்துதல். | சிறுவர் உரிமைகள் குறித்தும் கடமைகள் குறித்தும் தெளிவுபெற்றிருப்பர்.<br><br>உரிமை மீறப்படும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்து தெளிவு பெற்றிருப்பர்.<br><br>சிறுவர் உரிமைகளை சிறுவர்கள் அனுபவிப்பதற்கான தங்களுடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் அறிந்திருப்பர். | படி - 1<br>பொருத்தமான விடய ஆய்வுகளை குழுக்கலந்துரையாடலுக்கு வழங்குல்<br>படி - 2<br>சமூகத்தினதும் பெற்றோர், ஆசிரியினரதும் பொறுப்புக்களையும் கடமைகளையும் இனம் கண்டு பட்டியல் படுத்தல்<br>படி -3<br>தங்களால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்து திட்டமிட்டு அளிக்கை செய்தல். | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 9

## சிறுவர் துஷ்பிரயோகமும் பால்நிலை சமத்துவமும் (Child Abuse and Gender equality)

### 9.1 அறிமுகம்

அனைத்து பிள்ளைகளுக்கும் சமவாய்ப்புக்களை வழங்குவதோடு அவர்களை சமமாக வழிநடத்துதலும் வேண்டும் என்பதை ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் வலியுறுத்துகின்றது. பிள்ளைகளிடையே ஆண், பெண் என உயிரியல் அடிப்படையில் வேறுபாடு இருப்பினும் அவர்களது விருத்தியை மேம்படுத்தும் வகையில் அவர்கள் வேறுபாடின்றி சமமாக வழிநடத்தப்பட வேண்டும். முன்பள்ளி பிள்ளைகளிடமும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருவதை அறியமுடிகிறது. சிறுவர் துஷ்பிரயோகம் பல்வேறு வழிகளில் நிகழ்த்தப்படுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்திற்குட்பட்ட பிள்ளைகளிடம் உடல், உள, சமூக, மனவெழுச்சிசார் பிரச்சினைகள் ஏற்படுத்துகின்றன. சிறுவர்துஷ்பிரயோகத்துக்கும் பால்நிலைச் சமத்துவமின்மைக்கும் நெருக்கமான தொடர்புண்டு. முன்பள்ளி வயதிலேயே ஊட்டப்படுகின்ற பால்நிலைச் சமத்துவமின்மையானது சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதற்கு ஏதுவான காரணியாக உள்ளது. இதனால் பால் நிலைச் சமத்துவம் பற்றிய அறிவும், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய அறிவும் அவற்றை குறைக்கக் கூடிய அல்லது தடுக்கக்கூடிய முறைகள் உபாயங்கள் என்பவை தொடர்பான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை முன்பள்ளி முகாமைத்துவக் குழுவினர் பெற்றிருத்தல் அவசியமானதாகும். இவை சிறுவர் துஷ்பிரயோகம் நிகழும் சம்பவங்களை தடுக்கவும் இன்னும் முற்காப்பு உபாயங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்தவும் வழிசமைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| பால், பால் நிலை சமத்துவம் தொடர்பான தெளிவாக அறிவைப்பெறுதல். | பால் நிலைச்சமத்துவத்தைப் பேணவேண்டியதன் அவசியம் பற்றியும் பால் நிலைச் சமத்துவத்தைப் பின்பற்றுவதால் கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றியும் விளங்கியிருப்பர். | படி 1<br>பங்குபற்றுநர் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களை அமைத்தல்.<br>படி 2<br>எழுதப்பட்ட அட்டைகளை ஒவ்வொரு குழுக்களும் வழங்கி (தொழில்கள், இயல்புகள், துலங்கல்கள்) அவற்றில் ஆண்களுக்குப்பொருத்தமானவை எவை, பெண்களுக்கு பொருத்தமானவை எவை என குழு நிலையில் கலந்துரையாடி பட்டியற்படுத்த வழிப்படுத்தல்.<br>படி 3<br>பட்டியற்படுத்தியவற்றை வகுப்பு நிலையில் முன்வைத்தல்.<br>படி 4<br>பயிற்றுநர் கலந்துரையாடலை தூண்டுவதன் மூலம் பால்,பால்நிலை தொடர்பான தெளிவை ஏற்படுத்துவார்.<br>படி 5<br>முன்பள்ளி பிள்ளைகளை வழிநடத்துவதில் பால்நிலை சமத்துவத்தினை நடைமுறைப்படுத்த தூண்டும் வகையிலான கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குதல். | பல்லூடக எறியி, மடிக்கணணி, பக்கப்புரட்டி, போஸ்டர், பேப்பர், மாக்கர், பெயின்ரிஸ்ரிக், பிளனல்போட், | குழுக்கலந்துரை யாடல்<br>குழுமுன்வைப்பு | 3 மணித்தி யாலம். | அவதானிப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | படி 6<br>முன்வைப்பு மற்றும் கலந்துரையாடல் தொடர்பாகத் தொகுத்து வழங்குதல். | | | | |
| சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோக வகைகள் தொடர்பான தெளிவான அறிவைப் பெற்றிருத்தல். | முன்பள்ளி முகாமைத்துவக்குழுவினர் சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன, அதன் வகைகள் தொடர்பாகவும் தெளிவான விளக்கத்தை பெறுவர். | படி 1<br>வகுப்புநிலையில் பின்னோக்கு வாழ்க்கைப்பயணத்தை மேற்கொள்ளச்செய்து சிறுவர்பராயத்தில் தாம் அனுபவித்த மகிழ்ச்சியான மற்றும் பாதிப்பை ஏற்படுத்திய சம்பவங்களை மீட்டுப்பார்க்க வழிப்படுத்தல்.<br>படி 2<br>சோடியாக இணைந்து தமது சிறுபராய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கல்.<br>படி 3<br>வகுப்பு நிலையில் தமது அனுபவங்களை பகிர்வது கொள்ள சந்தர்ப்பம் வழங்கல்.<br>படி 4<br>வளவாளர் சிறுவர் துஷ்பிரயோகம், வகைகள் தொடர்பாக விளக்கமளித்து தெளிவினை ஏற்படுத்தல். | | | | |
| சிறுவர் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப் படுகின்ற | சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந் தும் பாதுகாப்பு கொடுக்கும் அறிவைப் | படி 1<br>பங்குபற்றுநரின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப்பரித்து சமூகத்தில் | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சந்தர்ப்பங்களை இனங்கண்டு பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினர் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | பெற்றிருப்பர். <br><br> சிறுவர்களைப்பாதுகாப் பதில் ஆசிரியரினதும், பெற்றோரினதும் பங்கு தொடர்பான விளக்கம் பெறுவர் <br><br> பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான தவறான எண்ணங்களிலிருந்து விடுபட்டு தெளிவான விளக்கத்தைப்பெற்றிருப்பர். | நடைபெறுகின்ற மற்றும் ஆபத்து நிலைமைகளை கலந்துரையாடி மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை இனங்காண வழிப்படுத்தல். <br> படி 2 <br> வகுப்பு நிலையில் முன்வைத்தலும் கலந்துரையாடலும். <br> படி 3 <br> பயிற்றுநர் கலந்துரையாடலைத் தொகுத்து வழங்கி பொருத்தமான மேலதிக விளக்கங்களை வழங்குதல். | | | | |

சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள், புறக்கணித்தல், உதாசீனப்படுத்தல்,கவனியாதுவிடுதல், பாரபட்சம் காட்டுதல்,சுரண்டல்கள், வர்த்தக நோக்கில் பயன்படுத்துதல், பாதகமான வழிநடத்தல்கள் அனைத்தும்சிறுவர் துஷ்பிரயோகத்தினுள் அடங்கும்.

**துஷ்பிரயோகத்தின் வகைகள்**

- உடல்ரீதியான துஷ்பிரயோகங்கள்
- பாலியல் துஷ்பிரயோகங்கள்
- உணர்வுரீதியான துஷ்பிரயோகங்கள் (உளவியல்)
- புறக்கணித்தல்
- துன்புறுத்தல்

**உணர்ச்சிரீதியான துஷ்பிரயோகம்**

- ஏசுதல்
- புறக்கணித்தல்
- வார்த்தைகளால் புண்படுத்துதல்
- அச்சுறுத்தல்
- அவமானப்படுத்தல்
- தகாத வார்த்தைப்பிரயோகங்கள்(முட்டாள், உதவாக்கரை,அழுகுணி,.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. 4 பாலியல்துஷ்பிரயோகம் தொடர்பான மாயைகள் / தவறான கருத்துக்கள்

- பாலியல் துஷ்பிரயோகத்துக்கு அல்லது முறையற்ற பாலியல் தொடர்புகளுக்கு இலக்காவது பெண்பிள்ளைகள் மாத்திரமே.
- அழகான பெண்பிள்ளைகளே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்றனர்.
- பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் ஆண்களே.
- ஓரினச்சேர்க்கையில் ஈடுபடும் ஆண்களே, ஆண்பிள்ளைகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துகின்றார்கள்.
- அறிமுகமற்றவர்களாலேயே அதிகளவு துஷ்பிரயோகம் நிகழுகின்றது.
- துஷ்பிரயோகிகள் விரும்பத்தகாதஅருவருப்பான தோற்றம் கொண்டிருப்பார்கள்
- அடிமட்ட அல்லது வறிய குடும்பங்களிலேயே நிகழ்கிறது.
- எனது பிள்ளைக்கு அல்லது எனது குடும்பத்தில் நடைபெறாது.
- துஷ்பிரயோக சம்பவம் நடைபெற்றால் எனது பிள்ளை எனக்கு வெளிப்படுத்தும்
- துஷ்பிரயோகத்துக்கு உட்பட்ட பிள்ளை வளர்ந்து துஷ்பிரயோகியாக வரும்
- துஷ்பிரயோகம் தொடர்பாக நாம் முறைப்பாடு செய்யத் தேவையில்லை வேறு யாரேனும் முறைப்பாடு செய்வர்.
- பிள்ளைகளுக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழிப்புனர்வு ஊட்டினால் பிள்ளைகள் அச்சத்துக்கு உள்ளாவார்கள், எனவே அது தொடர்பாக பிள்ளைகளுடன் உரையாடாமல் இருப்பது நல்லதாகும்.

## சிறுவர்களைப் பாதுகாப்பதில் பெற்றோரின் பங்கு

- பிள்ளைகளுடன் மனம் விட்டுக் கதையுங்கள்- செவிமடுத்தல்,முகம் பார்த்துக் கதைத்தல், புன்சிரிப்பு, பாடசாலையுடன் தொடர்பைப் பேணுதல், அன்றாட நடவடிக்கைகளை கண்காணித்தல்.
- நல்ல தொடுகை, கெட்ட தொடுகை தொடர்பாக பிள்ளைகளை அறிவு ஊட்டமிடுங்கள்.
- வேண்டாம், முடியாது எனமறுத்து உரைப்பது பிழை இல்லை எனக் கற்றுக்கொடுத்தல்
- விரும்பத்தகாத இரகசியங்கள் எவை என்பதைக் கற்றுக்கொடுத்தல் ஆபத்தானவர்கள் யார் எனக் கற்றுக் கொடுத்தல் பிள்ளைகளுக்கு சுயபாதுகாப்பு வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தல்.:
- பெயர், தொலைபேசி இலக்கம், தொலைபேசியைப் பயன்படுத்தும் அறிவு,
- அனுமதி இன்றி எந்த நபருடனும் செல்லக்கூடாது என அறிவு ஊட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனதுக்குத் தொல்லை தரும் எந்த விடயத்தையும் கூறலாம் என நம்பிக்கை அளித்தல். தெரிந்த சாரதியானாலும் தனியே ஆபத்தானவர்கள் யார் எனக் கற்றுக் கொடுத்தல்
- பிள்ளைகளுக்கு சுயபாதுகாப்பு வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தல்.
- பிள்ளைகளின் நண்பர்கள், அவர்களது பெற்றோருடன் நல்ல உறவினைப் பேணுதல்.
- ஒத்த வயது நண்பர்களுடன் தான் சேர்கிறார்களா என அறிதல்.
- தனிமையாக மனித நடமாட்டம் குறைந்த இடங்களில் இருக்கக் கூடாது என அறிவுறுத்துதல்.
- அறிமுகமில்லாத ஒருவர் நோட்டமிடுவாராயின், பின்னால் சுற்றித்திரிவார் ஆயின் பெற்றாருக்கு அல்லது நம்பிக்கைக்குரியவரிடம் முறையிடவேண்டும் என்பதைக்கூறிவைத்தல்
- அறியாதவர் தரும் இனிப்பு பரிசுப் பொருட்களை ஒருபோதும் வாங்கக்கூடாது என அறிவுறுத்தல், தெரிந்தவராயின் பெற்றோரின் அனுமதியுடன் வாங்கக் கற்றுக்கொடுத்தல்
- தனியாக செல்வாராயின் பெற்றோர் சேர்ந்து செல்லுதல். பாதுகாப்பு இடங்களை தெரியப்படுத்தல்.
- தனியே செல்லக்கூடாது என கூறுதல்
- முன்பள்ளி/பாடசாலை போன்ற நிறுவனங்களின் நன்மதிப்பை நம்பி ஏமாறக்கூடாது.
- முன்பள்ளி/பாடசாலை நேரம் முடியுமுன்னர் பாடசாலை வளாகத்தைவிட்டுவெளியேறக்கூடாது.
- இணையப் பாவனையை அவதானித்தல்
- பிள்ளைகளின் நண்பர்கள், அவர்களது பெற்றோருடன் நல்ல உறவினைப் பேணுதல் ஒத்த வயது நண்பர்களுடன் தான் சேர்கிறார்களா என அறிதல்.
- தனிமையாக மனித நடமாட்டம் குறைந்த இடங்களில் இருக்கக் கூடாது என அறிவுறுத்துதல்.
- பிள்ளைகளுக்கு சுயபாதுகாப்பு வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தல்.
- பிள்ளைகளின் நண்பர்கள், அவர்களது பெற்றோருடன் நல்ல உறவினைப் பேணுதல்.
- ஒத்த வயது நண்பர்களுடன் தான் சேர்கிறார்களா என அறிதல்.
- தனிமையாக மனித நடமாட்டம் குறைந்த இடங்களில் இருக்கக் கூடாது என அறிவுறுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 10

## முன்பள்ளி பிள்ளைகளுக்கான உள்ளூர் வளங்களை உள்ளடக்கியதான சுகாதாரமும் போசாக்கும்

### அறிமுகம்

ஆரோக்கியமான திறன்வாய்ந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு பிள்ளைகளின் போசாக்கும் ஆரோக்கியமும் அவசியமாகின்றது. இலங்கையில் பிள்ளைகளைப் பாதிக்கின்றகாரணிகளில் போசாக்கு தொடர்பான நிலமைகள் முதன்மையாகக் காணப்படுகின்றன. தீவிரமான போசாக்குக்குறைபாடும், போசாக்கின்மையும் முக்கியமான காரணிகளாக இருக்கின்றன. முன்பள்ளி பிள்ளைகளுக்கு இரத்தச்சோகை நோய் பொதுவான நோயாகவும் காணப்படுகின்றது.

அதீத நிறையும் அச்சுறுத்தும் ஒரு நோய்க் காரணியாகக் காணப்படுகின்றது. இது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் தன்மையினை காணமுடிகின்றது. அதீத நிறை தொற்றாநோய்களுக்கு ஒரு முக்கியமான காரணியாக அமைகின்றது. முறையான உடற்பயிற்சி செய்யாமையும் ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கமும் புகையிலை மற்றும் மதுபான பாவனையும் தொற்றா நோய்களுக்கு பங்களிப்புச்செய்கின்றபிரதான காரணிகளாக அமைகின்றன.

ஆரோக்கியத்திற்கு பொருத்தமாக என்ன வகையான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பது முக்கியமாகும். ஏனெனில் தேவையில்லாத அவசியமற்ற விலைகூடிய நாகரீகமான உணவை உட்கொள்ளும் பழக்கம் நடைமுறையில் உள்ளது. உள்ளூரில் கிடைக்கக்கூடிய வளங்களை பயன்படுத்தி உணவு உற்பத்தி செய்வதற்குப்பதிலாக நாகரீக உணவுகளை உட்கொள்கின்றோம். ஆகவே நாங்கள் சரியான உணவுத்தெரிவிலும் முறையான உணவுப்பழக்கங்கள் தொடர்பிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது கட்டாயமானதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| குடும்பத்திலும் முன்பள்ளியிலும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தையும் சுகாதார பழக்கவழக்கங் களையும் அறிமுகப்படுத்துதல். | எல்லா முன்பள்ளி பிள்ளைகளும் ஒழுங்காக அவர்களின் நிறையினை பதிவிடல் வேண்டும்.<br><br>பொதுசுகாதார உத்தியோகத்தர் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களின் உதவியுடன் நிறையினை அறிந்திருப்பர். | படி 1<br><br>பங்குபற்றுநரை 4 குழுக்களாக்குதல்<br><br>படி 2<br><br>குழுக்களில்<br><br>1. நாளாந்தம் உண்ணும் உணவுகளை காலை, மதியம், இரவு என பட்டியற்படுத்தல்<br><br>2. இலகுவில் உள்ளூரில் கிடைக்ககூடிய உணவுகள், கடைகளில் பெற்றுக்கொள்ளும் நாகரிக உணவுகளை பட்டியற்படுத்தல்.<br><br>3. நாம் உட்கொள்ளும் உணவில் கிடைக்கக்கூடிய போசனைக்கூறுகளை பட்டியல்படுத்தல்.<br><br>படி 3<br><br>பட்டியற்படுத்திய | போஸ்ரர் பேப்பர்<br><br>மாக்கர்<br><br>காட்சிப்படஅட்டை<br><br>பல்லூடக எறியி | குழுவேலை<br><br>கலந்துரையாடல்<br><br>விரிவுரை<br><br>பகுப்பாய்வு | 2 மணித்தியாலம். | அவதானம் |
| பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத் திற்கும் தேவையான உணவுகளை இனங்கானுதல் | உடற்திணிவுச்சுட்டெண் கணிப்பிடப்பட்டு சிறுவர் ஆரோக்கிய வளர்ச்சி பதிவேடு(CHDR) நிறையை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும். | | | | | |
| முன்பள்ளி பிள்ளைகளுக்கான உணவு அட்டவணையை அறிமுகப்படுத்தல் | பெறுமதியற்ற உணவுகளுக்குப்பதிலாக உள்ளூரில் கிடைக்கக்கூடிய உணவுகளை உண்ணுகின்றார்கள் | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பெற்றோர்கள் ஆர்வத்துடன் மற்றும் அக்கறையுடன் குறித்த நிகழ்ச்சியில் பங்குபற்றுவர். | உணவுகளை காட்சிப்படுத்தலும் தெளிவுபடுத்தலும்.<br>படி 4<br>பயிற்றுவிப்பாளர் காட்சிப்படுத்திய உணவுகளில் நாம் உட்கொள்ளக்கூடிய உணவுகளையும் அதன் போசனைக்கூறுகளையும் குறிப்பிட்டு இவற்றினை அடிப்படையாக வைத்து சிறுவர்களின் உடற்திணிவுச்சுட்டெண் தொடர்பாகவும் தெளிவாகக்குறிப்பிடுவர்<br>படி 5<br>சிறுவர் ஆரோக்கிய வளர்ச்சி பதிவேடு மற்றும் உடற்திணிவுச்சுட்டெண் அட்டவணையினை அறிமுகப்படுத்தல் | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| பிள்ளைகளைத்தாக்கும் பொதுவான நோய்களை அறிந்துகொள்ளல் | முகாமைத்துவக்குழுவினர் சுகாதார உத்தியோகத்தரின் உதவியுடன் பிள்ளைகளின் போசாக்கு நிலைமைகள் முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கும். | படி 1<br>பங்குபற்றுநர்களை 3 குழுக்களாக்குதல்<br>படி 2 குழுக்களுக்கு<br>1. தொற்றுநோய்களை வகைப்படுத்தல்<br>2. தொற்றாநோய்களை வகைப்படுத்தல்<br>3. முன்பள்ளிச் சிறுவர்களுக்கு ஏற்படும் தொற்று தொற்றா நோய்களை வகைப்படுத்தல்.<br>படி 3<br>பட்டியற்படுத்தப்பட்டவகைகளை காட்சிப்படுத்தலும், விளக்கம் கொடுத்தலும்.<br>படி 4<br>பயிற்றுவிப்பாளர் தொற்று, தொற்றாநோய்கள் தொடர்பாக மேலதிக விளக்கம் வழங்கல். | போஸ்ரர் பேப்பர்<br>மாக்கர்<br>காட்சிப்படஅட்டை<br>பல்லூடக எறியி | குழுவேலை<br>கலந்துரையாடல்<br>விரிவுரை<br>பகுப்பாய்வு | 1 மணித்தியாலம் | அவதானம் |
| தொற்றா நோய்களையும் அவற்றுக்கான காரணிகளையும் அறிந்து கொள்ளல் | அதீத நிறைகூடுதல் மிகக்கவனமாக கவனிக்கப்படுகின்றது.<br>வீடுகளிலும் முன்பள்ளிகளிலும் தனிமனித சுகாதாரம் மிகக்கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| பருவகாலங்களிலும் அனர்த்த காலங்களிலும் ஏற்படும் நோய்கள் தொடர்பாகவும் தடுப்புமுறைகள் தொடர்பாகவும் விழிப்படைந் திருத்தல். | நோய் ஏற்படாது பிள்ளைகள் பாதுகாக்கப்படுவர்.<br><br>அவ்வாறு நோய்கள் ஏற்பட்டாலும் அவற்றிற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பர். | படி 1<br>குழுக்களாக்கி பருவகாலங்களில் மற்றும் அனர்த்த காலத்தில் ஏற்படும் நோய்களை இனங்காணல்<br>படி 2<br>இனங்காணப்பட்ட நோய்களை வகைப்படுத்தல்<br>படி 3<br>மேற்குறிப்பிட்ட நோய்களுக்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை குறிப்பிடல் | போஸ்ரர் பேப்பர்<br>மாக்கர்<br>காட்சிப்படஅட்டை<br>பல்லூடக எறியி | குழுவேலை<br>கலந்துரை யாடல்<br>விரிவுரை | 30 நிமிடம். | அவதானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 11

## முன்பள்ளிகளில் பயன்படுத்துகின்ற ஆவணங்கள் (Documents used in Preschool)

### 11.1 அறிமுகம்

ஓர் நிறுவனம்/முன்பள்ளிக்கும் ஆவணங்கள் உண்டு. அவ்ஆவணங்கள் ஒரு முன்பள்ளி திறம்பட இயங்குவதற்கு முக்கியத்துவமானவை. அவற்றைப் உரியமுறையில் பயன்படுத்துவதால் முன்பள்ளியின் தனித்தவம், ஸ்திரத்திரம் - பாரம்பரியம், வரலாறு, அபிவிருத்தி, மாணவர் திறன்விருத்தி பேணப்படுகின்றது. இவ்ஆவணங்கள் நாளாந்தம் பதியப்படுவதோடு இற்றைப்படுத்தலும் வேண்டும். முகாமைத்துவக்குழுவினர் முன்பள்ளியில் பேணப்படும் ஆவணங்கள் தொடர்பான பூரண அறிவைக்கொண்டிருந்தால் முன்பள்ளியின் முன்னேற்றத்திற்கும் பிள்ளைகளின் விருத்திக்கும் தமது முழுப்பங்களிப்பையும் வழங்குவார்கள். மற்றும் பல்வேறு தரப்பினர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கும், முகாமைத்துவக்குழுவினர் சரியான திட்டமிடலைச்செய்வதற்கு இவ்வாவணவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை அறிந்துகொள்வதால் முன்பள்ளிமுகாமைத்துவக் குழுவினர் பெற்றோர் தத்தமது பங்களிப்பை உணர்வார்.

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| முன்பள்ளியில் பேணப்பட வேண்டியஆவணங்களை இனங்காணல் | ஆவணங்களை பேணுவதில் கூட்டுப்பொறுப்புடன் பெற்றோர்கள் தொழிற்படுவார்கள்<br><br>பாடவிதான செயற்பாடுகள் சுமுகமாக நடைபெறும் | படி 1<br>**அறிமுகம்**<br>ஆவணங்கள் ஏன் அவசியம்? என்ற வினாவை முன்வைத்து கலந்துரையாடல்<br>படி 2<br>பங்குபற்றுநர்களுக்கு அட்டைத்துண்டுகளை வழங்கி ஒவ்வொரு ஆவணத்தின் பெயர் எழுதி காட்சிப்படுத்தல். | மல்ரி மீடியா, மடிக்கணினி, போஸ்ரர் பேப்பர், பிளனல் போட், பிறிஸ்ரல் போட், கத்தரிக்கோல், வைட்போட் மாக்கர், பெயின்ரிஸ் ஸ்ரிக், தம்பின், சலோரேப், யாப்பு புத்தகம், ஆவணப்புத்தகங்கள் | குழுமுறை, அளிக்கை, கலந்துரையாடல், அனுபவம்,பகிர்வு | 40 நிமிடம் | குழுப்பங்களிப்பு, அவதானித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | படி 3<br>முன்பள்ளிகளுக்கான நியம ஆவணங்கள் கைநூலுடன் ஒப்பிட்டு பார்த்தல் / இல்லாததை எழுதுதல்<br>படி 4<br>போஸ்டர் பேப்பரில் முன்பள்ளி, ஆசிரியர், மாணவர் தொடர்பான ஆவணங்களை பட்டியற்படுத்தி எழுதல்.<br>படி 5<br>தொகுப்புரை சகல ஆவணங்களின் மாதிரிகளை காட்சிப்படுத்தல். | | | | |
| ஆவணங்கள் பதிதல் இற்றைப்படுத்தல் | புதிய விடயங்களிளை இணைக்கப்பட்டிருக்கும் | படி 1<br>அறிமுகம்<br>செயற்பாடு 1 இன் விடயத்தை ஞாபகப்படுத்தல்<br>படி 2<br>ஒவ்வொரு ஆவணங்களின் பதிவு, பதிதல், இற்றைப்படுத்தல் விடயங்களின் மாதிரிகளை காட்சிப்படுத்தல்<br>**படி**3 தொகுப்புரைமாதிரி கூட்ட அறிக்கை காட்சிப் படுத்தல் / வாசித்தல். | மல்ரி மீடியா,<br>மடிக்கணினி,<br>போஸ்ரர் பேப்பர்,<br>பிளனல் போட்,<br>பிறிஸ்ரல் போட்,<br>கத்தரிக்கோல்,<br>வைட்போட் மாக்கர்,<br>பெயின்ரிஸ் ஸ்ரிக்,<br>தம்பின்,<br>சலோரேப்,<br>யாப்பு புத்தகம்,<br>ஆவணப்புத்தகங்கள் | குழுமுறை,<br>அறிக்கை,<br>கலந்துரையாடல்,<br>அனுபவம்,பகிர்வு | 10 நிமிட | குழுப்பங்களிப்பு,<br>அவதானித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு - 12

## கூட்டங்கள் நடாத்துதலும் அறிக்கை எழுதுதலும். (Conducting Meetings and Report writing)

**அறிமுகம்**

கூட்டங்கள் முன்பள்ளியின் முகாமைத்துவக்குழுவின் தெரிவுக்கும் அதன் செயற்பாட்டுக்கும் முக்கியமானவையாகும். கூட்டங்களிலே குறிப்பிட்ட முன்பள்ளி தொடர்பான முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. கூட்டங்களின் மூலம் முன்பள்ளியின் செயற்பாடு, விருத்தி தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினர்களிடம் இருந்து ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளலாம். வருடாந்த பொதுக்கூட்டம் ஜனவரி 1 முதல் மார்ச் 31 ஆம் திகதிக்குள் கூட்டப்பட்டு முன்பள்ளியின் நடப்பாண்டிற்கான முன்பள்ளி முகாமைத்துவக்குழுதெரிவுசெய்யப்படும். அவசியம் ஏற்படின் விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படலாம். முன்பள்ளி முகாமைத்துவக்குழுக் கூட்டம் மாதாந்தம் கூட்டப்படவேண்டும்.

கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துவதை கூட்டறிக்கை உறுதிப்படுத்துவதால் முன்பள்ளியின் வினைத்திறனையும் விளைதிறனையும் எடுத்துக்காட்டுகின்றன. முன்பள்ளிகளில் கூட்டறிக்கைகளும் முக்கியமான ஆவணங்களாகும். கூட்டறிக்கைகளின் உதவியுடன் முன்பள்ளி முகாமைத்துவக்குழு தனது இலக்கை நோக்கி முறையாக வகையில் பயணிக்கமுடியும். அத்துடன் கூட்டஅறிக்கைகளே முகாமைத்துவக்குழுவின் செயற்பாடுகளை சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு தெளிவுபடுத்தக்கூடியதாக இருக்கும். முக்கியமானவற்றில் கூட்டஅறிக்கையும் ஒன்றாகும். எனவே கூட்டஅறிக்கைகள் உரியமுறையில் எழுதப்படவேண்டும்.

| குறிக்கோள் | கற்றல்பேறு/ வெளியீடுகள் | செயற்பாடுகள் | வளங்கள் | முறை | காலம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| ஆவணங்கள் பதிதல், கூட்ட அறிக்கை எழுதுதலை அறிதல் | கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறும்.<br><br>மாணவர்களின் திறன்விருத்தி, ஆளுமை வளர்க்கப்படும் | படி 1<br>அறிமுகம்<br>கூட்டங்கள் ஏன் அவசியமானவை?<br><br>கூட்ட அறிக்கை ஏன் எழுத வேண்டும்?<br>கலந்துரையாடல் | மல்ரி மீடியா, மடிக்கணனி, போஸ்ரர் பேப்பர், பிளனல் போட், பிறிஸ்ரல் போட், கத்தரிக்கோல், வைட்போட் மாக்கர், | குழு முறை<br>அளிக்கை<br>கலந்துரையாடல் | 30 நிமிடம் | அவதானித்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | படி 2<br>பங்குபற்றுநர்களுக்கு அட்டைத்துண்டுகளை வழங்கி கூட்ட அறிக்கையில் இடம்பெற வேண்டிய விடயங்கள் எழுதி காட்சிப்படுத்தல்<br>படி 3<br>கூட்ட அறிக்கை விடயங்களை கலந்துரையாடி ஒழுங்குபடுத்தல்<br>படி 4<br>தொகுப்புரை<br>மாதிரி கூட்ட அறிக்கை காட்சிப்படுத்தல்/ வாசித்தல்<br><br>எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றல்/ பதில் செயற்பாடுகள் செய்வதை உறுதிப்படுத்தல் | பெயின்ரிஸ் ஸ்ரிக்,<br>தம்பின்,<br>சலோரேப், | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## பின்னிணைப்பு 2.1

**பொதுவாக பாடசாலை ஆயத்தம் என்ற பரிமாணத்தில் பாடசாலைச் சூழலைத் தரமானதாக்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். பாடசாலைகள் ஆயத்தம் செய்ய வேண்டியவை.**

i. அனுமதிக்கப்படும் பிள்ளைகளுக்கு போதுமான பௌதீக வசதிகளை ஏற்படுதல்.
(கட்டடம், இடவசதி, விளையாட்டு முற்றம், விளையாட்டு உபகரணம், பொருத்தமான போதிய இருக்கை வசதி, மலசலகூட வசதி - இருபாலருக்கும் ஏற்றது)

ii. பெற்றோர் சந்திப்பு
- பிள்ளை அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே செய்யப்பட வேண்டும். இங்கு பாடசாலைக் கலாசாரம், பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்
- பாடசாலைச் சீருடை, உணவு முறை, சட்டதிட்டங்கள், ஒழுக்கம், புத்தகப்பை, இலவசப் பாடநூல், கொண்டு வரவேண்டிய பொருட்கள், நீர்பபோத்தல்

iii. பிள்ளைகள் பாடசாலைச் சூழலுடன் ஒன்றிணைவதற்கான செயற்பாடுகள்
- பிள்ளைகள் பாடசாலைச் சூழலை பார்வையிடவும், பாதுகாப்பாக இருக்கவும், பொது இடங்களை இனங்காணல் (அதிபர் அறை, மலசலகூடம்)
- ஏனைய பிள்ளைகளுடன், ஆசிரியருடன் பழகிக் கொள்ள வாய்ப்பழித்தல்.

iv. வகுப்பிற்கு ஓர் பொருத்தமான ஆசிரியர் நியமித்தல் (35 பிள்ளைக்கு). அவர் பல்துறைத் தேர்ச்சிகளைக் கொண்டதாக இருத்தல். (நேர்மறையான மனப்பாங்கு, ஆடல், பாடல், பெற்றோருடனான உறவு, தொடர்பாடற் திறன், அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, அக்கறை, திட்டமிடல், தொடர்ந்து கற்றல், சிறுவர் உரிமை)

v. வகுப்பறை அதற்குப் பொருத்தமான இடத்தில் வசதிகளுடன் இருத்தல் ஆபத்தற்ற விளையாட்டு முற்றம் இருத்தல்.

vi. காட்சிப்படுத்தலுக்கான வசதிகள், கற்றல், கற்பித்தல் சாதனங்கள்

vii. கலைத்திட்டம், போதிய இலவச பாடநூல், விரிவான வேலைத்திட்டம், மாணவர் வரப்பதிவேடுகள் போதியளவு பெற்றுக் கொள்ளல்.

viii. வினைத்திறனான கற்பித்தல் இடம்பெறல். போதிய நேரம் ஒதுக்குதல். (ஈடுபாடு, மாணவர்கள் இடைத்தாக்கம், திட்டமிடல் கணிப்பீடு, மதிப்பீடு, பயிற்சிகள், பின்னூட்டல் வழங்கல், ஊக்குவித்தல் உத்திகள்)

ix. நல்ல கற்பித்தல் முறைகள் பயன்படுத்தல். (விளையாட்டு, செயற்பாடு, குழுமுறை, பங்குபற்றல், செய்துகாட்டல், செய்து பார்த்தல்)

## பின்னிணைப்பு 2.2

பெற்றோர் செய்ய வேண்டியவை.
- ➢ பால்நிலை சமத்துவம், சிறுவர் உரிமை, பாதுகாப்பு ஏற்பாடுகள் இருத்தல்.

பெற்றோர் செய்ய வேண்டியவை.

i. பிள்ளைகள் தனது வேலைகளை தானே செய்ய உதவுங்கள். (சுயஉதவி)
ii. பிள்ளைகள் வீட்டிலிருந்து வெளயே சிலமணிநேரம் இருக்க உதவுங்கள்.
iii. பிள்ளைகளை ஒற்றுமையாக சேர்ந்து விளையாட வாய்ப்பு வழங்குங்கள்.
iv. பிள்ளைகளுக்கு செவிமடுங்கள். அவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. தமது உணர்வுகளை தெரிவிக்க வாய்ப்புக்கள் வழங்குங்கள்.

vi. வீட்டில் கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்துங்கள்.

(போதிய விளையாட்டுபகரணங்கள் பெற்றுக்கொடுத்தல், கீற, கிழிக்க செய்து பார்க்க வசதி செய்தல், மண், நீரில் விளையாட சந்தர்ப்பம் கொடுத்தல், பெற்றோருடன் வேலை செய்ய, அவதானிக்க விடல்)

vii. பிள்ளைகள் பல்வேறு கற்றல் அனுபவங்களையும் பெற உதவுங்கள்.

(கதை சொல்லுதல், பாடுதல், ஆடுதல், எழுத்து முன் பயிற்சிகள், வாசிப்பு முன் பயிற்சிகள், சரியான பேச்சாற்றல், வினாக்களுக்கு விடை கூறுதல், சுகாதார பழக்க வழக்கங்கள், விழுமியங்களைப் பின்பற்றுதல், அறஒழுக்க விருத்தி, சுற்றாடலை விளங்கிக் கொள்ளல், சமூக மனப்பாங்கு விருத்தி, கணித எண்ணக்கரு)

viii. பிள்ளைகளுடன் நேரத்தை செலவழியுங்கள்.

ix. பிள்ளைகளைப் பாராட்டுங்கள்.

x. ஏனையோருக்கு உதவிசெய்ய கற்றுக் கொடுங்கள்.

xi. உரிய வயதில் முன்பள்ளிக்கு , பாடசலைக்கு பிள்ளைகளை அனுப்பி வையுங்கள்.

## பின்னிணைப்பு 2.3

**விடய ஆய்வு 01**

வட்டிவெளி கிராமத்தில் அறிவொளி சனசமூக நிலையம் உள்ளது. இந்நிலையத்தினால் நடாத்தப்படும் ஓர் முன்பள்ளி வளர்பிறை முன்பள்ளி ஆகும். இங்கு 2018ஆம் ஆண்டில் 30 பிள்ளைகள் கல்விகற்றார்கள். அவர்களில் 16 மாணவர்கள் விலகிச்செல்ல 16 பிள்ளைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள். பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளுவதும், முன்பள்ளி ஆசிரியர்களை நியமிப்பதும் பாடசாலை முகாமைத்துவக் குழுக்களின் பொறுப்பாகும்.

2018 டிசம்பர் மாதத்திலேயே இவர்கள் கூடி புதிய பிள்ளைகளை அனுமதித்தல் தொடர்பாக ஆராய்ந்தார்கள். அவர்களின் முயற்சியினால் அவ்வூரைச்சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் பாடசாலைக்கு வர்ணம் தீட்டிக்கொடுத்தார். முன்பள்ளி பிள்ளை ஒருவரின் பெற்றோர் திருத்தப்பட வேண்டிய தளபாடங்களை திருத்தி வர்ணம் தீட்டிக்கொடுத்தார். முன்பள்ளியில் இரண்டு ஆசிரியர்களும் இணைந்து வருடாந்த விரிவாக்கத்திட்டத்தினை தயாரித்திருந்ததுடன் தேவையான பதிவேட்டுக் கொப்பிகளை பெற்றிருந்தனர். புதிதாக சேர்க்கப்பட்ட பிள்ளைகள் பெற்றோருடன் டிசம்பர் மாதம் 25ஆம் திகதி வரவழைக்கப்பட்டனர். அவர்கள் முன்பள்ளி வளாகத்தைச் சுற்றிப்பார்த்தார்கள். பிள்ளைகள் விளையாட்டு முற்றத்தில் ஊஞ்சல்,சறுக்கல் விளையாட்டு,.... விளையாடல் போன்றவற்றின் ஊடாக மகிழ்ச்சியாக விளையாடினர். பெற்றோர்கள் ஒன்றுகூடி பிள்ளைகளுடன் சேர்ந்து உணவு பரிமாறுவர். பிள்ளைகள் கூடி விளையாடி மகிழ்த்தார்கள்.

இச்சிறுவர்கள் விளையாடி மகிழ்ந்த வேளை பெற்றோருக்கான கூட்டம் இடம்பெற்று அதில் பாடசாலை ஒழுங்குமுறை தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. பிள்ளைகளுக்கான சீருடைகள் வழங்கப்பட்டன. பாடசாலை தொடங்கும் நாள் அறிவிக்கப்பட்டது. 2019.01.02 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை 7.30 மணிக்கே ஆசிரியர்களும் முகாமைத்துவக்குழு உறுப்பினர்களும் முன்பள்ளிக்கு வருகை தந்திருந்தனர். முன்பள்ளிக்கு பெற்றோர் காலை 9 மணிக்கெல்லாம் பிள்ளைகளை அழைத்து வந்தனர். ஆசிரியர்கள் பிள்ளைகளை வரவேற்றனர். சரியாக 9 மணிக்கு பாடசாலை பழைய மாணவர்கள் பிள்ளைகளுக்கு மாலை அணிவித்து முன்பள்ளி கூட்ட அரங்கத்திற்கு அழைத்து வந்தனர். அங்கு பழைய பிள்ளைகளினதும், ஏனைய வகுப்புப்பிள்ளைகளினதும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அவர்கள் முகமூடி அணிந்து ஆடி பாடினார்கள். அதனை புது மாணவர்கள் பார்த்து மகிழ்ந்தனர். சிலர் தாங்களும் இணைந்து கொண்டனர். எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. முகாமைத்துவக் குழு உறுப்பினர் ஒருவரே சிற்றுண்டிகளை வழங்கினர். முன்பள்ளி ஆசிரியர் செயலாளர் என்ற வகையில் நன்றியுரை வழங்கினார்.

மறுதினம் பிள்ளைகள் சீருடையுடன் 8 மணிக்கு முதல் வருகை தந்தார்கள். ஆசிரியர் பிள்ளைகளை வரவேற்று உரிய இடங்களில் நீர்ப்போத்தல், உணவுப்பெட்டிகளை வைக்கச்செய்தார்கள். முன்பள்ளி ஆரம்பமாகும் வரை பிள்ளைகள் பெற்றோருடன இருக்க அனுமதிக்கப்பட்டார்கள். 8.30 மணிக்கு பிள்ளைகள் யாவரும் ஒன்றுகூடி இறைவணக்கம் செய்தனர்.

ஆசிரியர் அவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து உரையாடியதுடன் அன்று முழுவதும் பிள்ளைகள் விளையாட்டுப்பொருட்களை கையாண்டு சேர்த்து விளையாடி மகிழ்ந்தனர். சில பெற்றோரும் ஆசிரியருக்கு உதவியாக இருந்தார்கள். 11 மணியளவில் பிள்ளைகள் ஆசிரியருக்கு நன்றி கூறி மகிழ்ச்சியோடு வீட்டுக்குச்சென்றார்கள்.
இரண்டாம் வாரத்தில் இருந்து பிள்ளைகள் பாடசாலையில் பெற்றோரின்றி இருந்து கற்கும் நிலை காணப்பட்டது. தமது தேவைகளை ஆசிரியரின் துணையோடு நிறைவேற்றுவதை காணமுடிந்தது.

1) முன்பள்ளிகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கு எவ்வாறான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.
2) பிள்ளைகள் எவ்வகையான தேர்ச்சிகளை பெற வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.
3) முன்பள்ளியின் தயார் நிலைக்கு முகாமைத்துவக்குழு வழங்கிய பங்களிப்புக்கள் எவை?
4) பிள்ளைகளை ஆயத்தம் செய்ய குடும்பங்கள் எவ்வாறான பங்களிப்புக்களை வழங்கியிருந்தன?

## பின்னிணைப்பு 2.4

**ஒப்படை 1 :- குடும்பத்தின் ஆயத்தம்.**

குழுக்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு ஆயத்தப்படுத்துவதில் (தயார் படுத்தல்) குடும்பங்கள் எவ்வகையில் பங்களிப்புச்செய்யலாம்.

**ஒப்படை 2:- பாடசாலையின் ஆயத்தம்**

பிள்ளையை அனுமதிக்கும் பாடசாலை வெற்றிகரமான கற்றலுக்கு எவ்வகையான ஆயத்தங்களை மேற்கொள்ளவேண்டும்.

**ஒப்படை 03 :- பிள்ளைகளின் ஆயத்தம்**

ஆரம்ப பாடசாலை ஒன்றுக்குச் செல்லவுள்ள பிள்ளை அந்த நிலை மாற்றத்தை வெற்றி கொள்ள பெற்றிருக்க வேண்டிய அடிப்படைத்திறன்கள் (தேர்ச்சிகள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 8.1

**சம்பவத் திரட்டுக்கள்**

1. சித்திரன் எட்டு வயது நிரம்பிய சிறுவன். அவன் தனது தந்தையுடனும் சிறிய தாயாருடனும் வசித்து வருகிறான் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் அவனுக்கு ஒரு தங்கை பிறந்திருந்தாள். அந்த அழகிய தங்கையை விட்டுப் பிரிய அவனுக்கு மனம் வரவில்லை. அதனால் அவனுக்குப் பாடசாலை செல்வதில் அதிக விருப்பமில்லை பாடசாலை செல்வதை அவன் தவிர்த்து வந்தான். தனது பிள்ளையைப் பார்த்துக் கொள்ளச் சித்திரனின் உதவியையே சிறியதாயாரும் விரும்பினாள். எனவே அவளும் சித்திரன் பாடசாலைக்குச் செல்வதை விரும்பவில்லை. பாடசாலைக்கு வருகை தராதிருந்த சித்திரனைச் சந்திக்க விரும்பிய அவனது வகுப்பாசிரியர் ஒரு நாள் அவனது வீட்டுக்குச் சென்றார். அங்கே இருந்த சிறியதாயார் தமக்கு உதவிக்கு யாருமில்லை என்பதையும் சித்திரனைப் பாடசாலைக் அனுப்ப முடியாதெனவும் கூறினாள் ஆசிரியர் கூறிய புத்திமதிகள் எதுவுமே அங்கு பயனற்றுப் போனதால் ஆசிரியர் அங்கிருந்து கவலையோடு திருப்பினார்.
2. வேதியன் பதினொரு வயது நிரம்பிய சிறுவன் அவனது தந்தை இறந்து விட்டார். தந்தையின் மறைவுக்குப் பின்னர் பாடசாலைக்குச் செல்வதை வேதியன் நிறுத்திக் கொண்டான். வீட்டில் அவனது தாயாரைத் தவிர அவர்களுக்கு உதவியாக வேறெவரும் இருக்கவில்லை அவனது தாயார் கிராமத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்ற அவர்கள் எதிர்பார்க்கும் சிறு சிறு வேலைகளைச் செய்து கூலி பெற்றுத் தமது பிள்ளையை வளர்த்து வந்தாள். தாயாரின் கஸ்ரத்துக்கு உதவி செய்யும் விருப்பம் அவனுக்கு ஏற்பட்டது. இப்பொழுது ஒரு வேலையாளைத் தேடி வந்த முதலாளி ஒருவருடன் அவன் போகப் புறப்பட்டான். முதலாளி தனது தோட்டத்தின் சுற்றாடலை அழகுபடுத்தும் வேலையை அவனுக்குக் கொடுத்திருந்தார். முதலாளி அவனுக்கு மாதம் அறுநூறு ரூபாய் சம்பளம் வழங்கினார் அவன் அதனைப் பெற்றுத் தனது தாயாருக்குக் கொடுத்து மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தான்.
3. கம்சாயினி முன்பள்ளியில் பயிலும் ஒரு சிறுமி வயது மூன்றில் பள்ளியில் சேர்ந்து பயின்று வருகிறாள். இன்று ஐந்து வயது நிரம்பியுள்ள கம்சாயினி கடந்த ஓரிரு வாரங்களாகப் பள்ளிக்குச் சமூகம் தரவில்லை. சிறுமியின் வரவின்மைக்கான காரணமும் தெரியவில்லை. சிறுமியின் வரவில் ஒழுங்கின்மை காணப்பட்டதை அவதானித்த முன்பள்ளி ஆசிரியர் பெற்றோருக்கு இது குறித்துத் தெரியப்படுத்தியிருந்தார். ஆனால் பிள்ளையின் பெற்றோர் கம்சாயினியின் பள்ளிவரவைத் தொடர, எந்தவிதமாத நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஒருநாள் எதிர்பாராதவிதமாகப் கம்சாயினியின் தந்தையை முன்பள்ளிக்கு அயலிலே ஆசிரியர் சந்திந்தார். கம்சாயினியைப் பள்ளிக்கு ஒழுங்காக அனுப்பும்படி வேண்டினார். ஆனால் அவரோ "இந்த முன்பள்ளியில் எழுத்து எழுதப் படிப்பிப்பீர்களாயின் மாத்திரம் நான் எனது பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புவேன்" என உறுதியாகக் கூறினார். அதனால் ஆசிரியர் விளக்கிய முன்பள்ளிப் பயிற்சி நடவடிக்கைகள் எதனையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. பள்ளிக்குச் சிறுமியை அனுப்பும் செயலிலும் அவர் ஆர்வம் காட்டவில்லை. அதனால் சிறுமி குறித்து மேலும் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் எவையென ஆசிரியர் சிந்தித்தார்.
4. ராணி ஐந்து வயது நிரம்பிய அழகிய சிறுமி அவள் முன்பள்ளி செல்வதில் அதிக ஆர்வம் காட்டுவாள். பள்ளியில் இடம்பெறும் விளையாட்டுக்கள் கலை நிகழ்வுகள் அனைத்திலும் ஈடுபாட்டுடன் பங்குபற்றுவாள். கடந்த சில நாட்களாக அவள் பள்ளியில் சோர்வுற்றுக் காணப்பட்டாள். பலவேளைகளில் பள்ளிக்குப் போகாமலேயே வீட்டில் நிற்க விரும்பினாள். பள்ளிக்குச் சென்று வந்த அன்றொரு நாள் வீட்டில் அமர்ந்திருந்து அவள் அழத் தொடங்கினாள் அவளால் தனது துயரத்தை பயத்தை வேறுவழியில் வெளிப்படுத்தத் தெரியவில்லை. அவளது அழுகைக்கான காரணத்தை அறியப் பெற்றோர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பின்னர், அவள் தன்னைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பக்கத்துவீட்டு அண்ணா தன்மீது கோபம் கொண்டு அடித்ததாகக் கூறி விம்மி விம்மி அழுதாள். அடுத்தவீட்டு அண்ணாவின் மீது ராணி கொண்டிருந்த பாசத்தின் மத்தியில் அவனது செய்கையில் விருப்பற்ற நிலையில் அவன் அடித்ததற்கான காரணத்தை அவளால் சொல்ல இயலவில்லை. எது சரி எது தவறென்பதையும் சிறுமியான அவளால் விளக்கத் தெரியவில்லை. அவள் அழுதாள். அவள் நீண்ட நேரம் அழுது கொண்டே இருந்தாள். பெற்றோருக்கு உண்மையைத் தெரிந்து கொள்ள நீண்ட நேரம் எடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. முகாமைத்துவக்கொள்ளைகள் ஓர் அறிமுகம்,பேராசிரியர் சோ. சந்திரசேகரம், முனைவர் மா. கருணாநிதி,
2. கல்விச்சமூகவியல், பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா.
3. கல்வி நிருவாகமும் முகாமைத்துவமும்,பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா,
4. கற்றலும் கற்றல் சூழலும்,முத்து இராதாகிருஷ்ணன்,
5. கல்வியும் மனிதவள விருத்தியும்,பேராசிரியர் சோ.சந்திரசேகரம், பேராசிரியர் மா. சின்னத்தம்பி,
6. Safe guarding –Our Children A handbook for responsible adults, National Child protection authority – Srilanka 2013
7. உயிர்ப்பு,சாந்திகம் (2010),
8. ஆரம்பபிள்ளைப் பருவ விருத்தி நிலைய முகாமைத்துவக்குழு யாப்பும்,ஆரம்பபிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு,கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,விளையாடுவோம் கற்போம்,ஆரம்பபிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு, கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, 2015, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்), 1997, சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்.
9. Proposals for General Education in Srilanka – 2016, National Education Commission,Srilanka
10. Northern Education System Review, Northern Province Ministry of Education – 2014
11. சிறந்த பெற்றோராகுதல்- பெற்றோர் கல்வி வளவாளர்களுக்கான வழிகாட்டி கைநூல், சிறுவர் செயலக அலுவலகம், சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் விவகார அமைச்சு.
12. முன்பள்ளி உதவிப்பணிப்பாளருக்கான பயிற்சிக் கைநூல்,ஆரம்பபிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு, கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org